Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, OCTOBER 23, 2024

வியாழக்கிழமை ஒக்டோபர் 24, 2024 | ஒளி: 10 கதிர்: 078 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## ஜோன்ஸ்டனுக்கு விளக்கமறியல்



அசெம்பிள் வாகனத்தை உடமையாக்கி பயன்படுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் திருமதி தனுஜா லக்மாலி புதன்கிழமை (23) மாலை உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



# அறுகம்பேயில் அதிரடி பாதுகாப்பு

இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பு மற்றும் அறுகம்பே பகுதியில் உள்ள கட்டிட ஆக்கிரமிப்பு ஆகியவையே கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் அப்பகுதிக்கு வருகை தரும் தனது பிரஜைகளுக்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்துவதற்கான பயண ஆலோசனையை வழங்க தூண்டியுள்ளது என்று இலங்கை பொலிஸ் தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ, சறுக்கல் உட்பட்ட பொழுதுபோக்கு செயற்பாடுகள் காரணமாக இஸேரலிய சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கையில் அறுகம்பே மற்றும் பொத்துவில் மிகவும் விருப்பமான விடுமுறை இடமாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

"அவற்றில் அவர்களுக்கு இருந்த ஆர்வத்தின் காரணமாக, ஏராளமான இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் அறுகம் விரிகுடாவிற்கு வருகை தந்துள்ளனர், இதன் விளைவாக அப்பகுதியில் ஒரு கட்டிடத்தையும் ஆக்கிரமித்துள்ளனர். இப்பகுதி தற்போது இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளால் அதிக மக்கள் தொகை கொண்டதாக இருப்பதால், அவர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து சமீப காலங்களில் எங்களுக்குத் தகவல் கிடைத்தது" என்று அவர் கூறினார்.

பூர்வாங்க நடவடிக்கையாக பொலிஸார் ஏற்கனவே வீதித் தடைகளை அமைத்துள்ளதாகவும் வாகனங்கள் மற்றும் பொதுமக்களின் வழமையான சோதனைகளையும் மேற்கொண்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

பொலிஸ், விசேட அதிரடிப்படை (STF), கடற்படை, இராணுவம் மற்றும் அரச புலனாய்வு சேவைகள் (SIS) ஆகியவற்றின் ஈடுபாட்டுடன், அறுகம்பேவில் தற்போது விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை DIG தல்துவ உறுதிப்படுத்தினார்.

இதனைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் விடுமுறைக் காலத்தில் இலங்கைக்கு வருகை தரும் அனைத்து சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அறுகம்பே பகுதியில் உள்ள பிரபல சுற்றுலா இடங்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தப்படும் என நம்பத்தகுந்த தகவல் கிடைத்துள்ளதாக இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் பயண ஆலோசனையை வழங்கியதை அடுத்து, அவர் இந்த விளக்கத்தை அளித்துள்ளார்.

இதற்கிடையில், சமூக ஆர்வலர் ருக்கி பெர்னாண்டோ அறுகம்பே பகுதியில் இஸேரலிய சுற்றுலாப் பயணிகளால் 'சினகோக்' (யூத வழிபாட்டுத் தலம்) ஒன்றை நிறுவியதை கடந்த வாரம் தெரியப்படுத்தினார்.

தொடர்ச்சி P2

## "சகல தரப்பினரும் அவதானம் செலுத்தவும்"

எதிர்வரும் காலங்களில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தர உள்ளதாக இதுவரை கிடைத்த தகவலின் அடிப்படையில் அவதானிக்க முடிகின்றது.

இவை இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதுடன் இலங்கை தொடர்பாக வெளிநாட்டு பிரஜைகளின் மத்தியில் ஏற்படும் கௌரவம் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான சிறந்தொரு சந்தர்ப்பமாகும். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நாடாகவும், நமது நாட்டுக்கு வருகை தரும் சகல வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு, அவர்கள் எதிர்பார்க்கும் மகிழ்ச்சி, கேளிக்கை அதே போன்று அறிவு ஆகியவற்றைச் சுதந்திரமாகப் பெற்றுக்கொள்வதற்கான தேவையான சூழலை உருவாக்கித்தருவது நாம் அனைவரினதும் பொறுப்பாகும்.

தொடர்ச்சி P2

## அமெரிக்கா, இஸ்ரேல் ரஷ்யா எச்சரிக்கை

கிழக்கு மாகாணத்தில், அறுகம்பே குடா பகுதியில் உள்ள பிரபலமான சுற்றுலாத் தலங்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தலாம் என நம்பத்தகுந்த தகவல் கிடைத்துள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்க, ரஷ்யா மற்றும் இஸ்ரேல் ஆகிய தூதரகங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

எனவே, மறு அறிவித்தல் வரை அறுகம்பே பகுதிக்குச் செல்ல வேண்டாம் என தனது பிரஜைகளுக்கு அமெரிக்கத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2



## "நான் இலங்கையன்: பெருமை கிடைக்கும்"

இலங்கையில் பலம் பொருந்திய மாற்றத்தை மேற்கொள்வதற்காகத் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த நாங்கள் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றோம். அதன் பின்னர் மிகக் குறுகிய காலத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய ஆட்சியொன்றை உருவாக்குவதற்கான வாய்ப்பினை மக்களுக்குப் பெற்றுக்கொடுத்தோம் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## யாழ்.வேட்பாளர் திடீர் மரணம்



யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் செந்திவேல் தமிழினியன் திடீர் சுகவீனம் காரணமாகப் புதன்கிழமை (23) உயிரிழந்துள்ளார்.

இவர், வல்வெட்டித்துறை நகரசபை முன்னாள் உறுப்பினரும் உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்.

திடீர் சுகவீனம் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உதயராசாவின் வேட்புமனுவை ஏற்குமாறு உத்தரவு



2024 பொதுத் தேர்தலுக்கான ஜனநாயக தேசியக் கூட்டணியின் பரராஜசிங்கம் உதயராசாவின் வேட்புமனுவை ஏற்றுக்கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு புதன்கிழமை (23) உத்தரவிட்டுள்ளது.

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த பரராஜசிங்கம் உதயராசாவின் வேட்பு மனு முறைப்படி சமர்ப்பிக்கப்படவில்லை என கூறி வன்னி தேர்தல் அதிகாரியினால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## 'மினிஸ்ட்ரி ஒப் கிராப்' மாதிரிக்குத் தடை

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர்களான மஹேல ஜெயவர்தன மற்றும் குமார சங்கக்கார ஆகியோருக்குச் சொந்தமான 'மினிஸ்ட்ரி ஒப் கிரப்' உணவகத்தின் 'நண்டு' வர்த்தக முத்திரைக்குச் சமமான முத்திரையைப் பயன்படுத்தவும் அதன் சமையற் செயற்பாடுகளைப் பின்பற்றவும் பிரபல உணவகம் ஒன்றுக்கு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.பெர்னாண்டோ, இரண்டு தடை உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.



மினிஸ்ட்ரி ஒப் கிரப் கிராப் உணவகத்தை நடத்தும் கிங் கிராப் நிறுவனத்தினால் (crab corb (pvt)limited) தாக்கல் செய்த வழக்கை பரிசீலித்த நீதவான் இந்த உத்தரவை வழங்கினார்.

தொடர்ச்சி P2



### தீபாவளிக்கு ரூ.25,000

## செந்தில் அதிரடி

தீபாவளி பண்ணிடிகையை முன்னிட்டு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 25,000 ரூபாய் முற்பணம், வியாழக்கிழமை(24) முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## விடுமுறை இரத்து




அனைத்து தபால் ஊழியர்களின் விடுமுறைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. 23ஆம் திகதி புதன்கிழமை அமுலான இந்தத் திட்டம் நவம்பர் 14ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் செயற்பாடுகள் காரணமாக தபால் ஊழியர்களின் விடுமுறையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘மினிஸ்ட்ரி ஒப் கிராப்’ மாதிரிக்குத் தடை

கொழும்பு 03 அமைந்துள்ள கொவர்மண்ட் ஹோல்டிங் தனியார் நிறுவனம் மற்றும் த கிங் கிராப் உணவகத்தின் தலைமை சமையற்காரர் ஆகியோர் இதில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

பிரதிவாதிகள் புலமைச் சொத்துச் சட்டத்தை மீறியதாக வழக்கு பதியப்பட்டதோடு மனுதாரர் சார்பில் சுதத் பெரேரா அசோசியேட்டின் அறிவுறுத்தலின் பேரில் சட்டத்தரணி மனோஜ் பண்டார ஆஜரானார்.

மனுதாரரின் உணவகச் சங்கிலியில் முன்பு பணிபுரிந்த பிரதான சமையல்காரர், குறித்த நிறுவனத்தை விட்டு வெளியேறி, நிறுவனத்தின் நற்பெயரையும், புகழையும் பயன்படுத்தி அதற்கு சமமான வர்த்தக முத்திரை அதன் நிறம் மற்றும் வசனங்களைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கி வருவதாக மனுதாரரின் சட்டத்தரணி குறிப்பிட்டார்.

வாதி நிறுவனம் உலகின் பல நாடுகளில் தனது உணவக வலையமைப்பை விரிவுபடுத்தியுள்ளது. எட்டு ஆண்டுகளாக ஆசியாவின் 50 சிறந்த உணவகங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னணி உணவகமாகும்.

எனவே, உணவக வாடிக்கையாளர்களைத் தவறாக வழிநடத்தும் வகையில் ஒரே மாதிரியான நிறங்கள், வர்த்தக முத்திரையைப் பயன்படுத்துவது புலமைச் சொத்துச் சட்டத்தை மீறுவதாகும். அதன்படி, பத்து ஆண்டுகளாகப் பாதுகாக்கப்பட்டு வரும் நற்பெயர் வர்த்தக முத்திரை மற்றும் அதன் வசனங்களைப் பயன்படுத்தத் தடை விதிக்குமாறு மனுதாரர் தரப்பில் கோரப்பட்டது.

# “நான் இலங்கையன்: பெருமை கிடைக்கும்”

பொதுத் தேர்தலின் பின்னர் அரசாங்க அதிகாரத்தை நிறுவுதல் வரை இலங்கையிலும் உலகத்திலும் வரலாறு படைத்த மூவரை கொண்ட அரசாங்கமொன்றை நாங்கள் பேணிவருகிறோம். பொதுத் தேர்தல் நிறைவடையும் வரை மக்களின் அத்தியாவசிய சேவைகள், பொருளாதாரம், நாட்டின் பாதுகாப்பு சீர்குலையாமல் பேணி வரவேண்டிய பொறுப்பு எம்மூவருக்கும் கையளிக்கப்பட்டிருக்கிறது என்றார்.

பாராளுமன்ற தேர்தலையொட்டி திருகோணமலையில், புதன்கிழமை (23) நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நவம்பர 14ஆம் திகதிக்குப் பின்னர் பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த பெருமளவிலான உறுப்பினர்கள் மத்தியில் இருந்து 25 பேருக்கு குறைவான அமைச்சரவையொன்றை அமைத்துக் கொள்வோம். இராஜாங்க அமைச்சர் பதவிகள் கிடையாது. அமைச்சுப் பதவிகளுக்கு ஒத்துவரக்கூடியதாக பிரதியமைச்சர் பதவிகள் இருக்கும். அது முதல் படிப்படியாக நாட்டைக் கட்டியெழுப்பி இந்தப் பயணத்தைத் தொடருவோம் என்றார்.

நிலவிய பாராளுமன்றம் மக்கள் அனைவரினதும் எதிர்ப்பிற்கு அருவருப்பிற்கு இலக்காகியிருந்தது. கொவிட் பெருந்தொற்றின் போது வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது கூட அந்த எதிர்ப்பு மக்களிடமிருந்து தோன்றியது. ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்குக் கத்திகள், மிளகாய்த்தூளை எடுத்து வந்தார்கள். ஒருசிலர் புத்தகங்களை எறிந்து சண்டைப்பிடித்த விதத்தை நாங்கள் கண்டோம். எமது நாட்டில் மிருகக்காட்சிசாலை மக்களுக்குத் தடைசெய்யப்படவில்லை. எனினும் பாராளுமன்றம் தடைசெய்யப்பட்டது. அந்தப் பாராளுமன்றம் மக்களுக்குப் பொருத்தமற்ற பாராளுமன்றமொன்று அல்லவென்பது அதன் மூலமாக வெளிப்பட்டது. அந்தப் பாராளுமன்றத்தைச் சுத்தம் செய்து புதுப்பிக்க அணிதிரளுகின்ற வேளையில் முன்னாள் பாராளுமன்றத்திலிருந்த அறுபத்தியிரண்டு பேர் தன்னிச்சையாகவே நீங்கிச் சென்றிருக்கிறார்கள். திசைக்காட்டியின் நேர்மையான, ஊழலற்ற, அதைப்போலவே மக்களுக்காக எந்தவொரு சவாலையும் வெற்றி கொள்ளக்கூடியவர்களைக் கொண்டு பாராளுமன்றத்தை நிரப்புங்கள். அதற்காகத் திருகோணமலை மாவட்டத்திலிருந்து மிகச்சிறந்த பங்களிப்பினை பெற்றுக்கொடுங்கள் என்றார்.

எமது நாட்டில் நிலவுகின்ற பல பிரதான சவால்களை வெற்றிகொள்ளத் திருகோணமலை மாவட்டத்திலிருந்து திசைக்காட்டிக்கு பலம் பொருந்திய வெற்றி தேவை. சிங்கள, தமிழ், முஸ்லிம்

**“சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் நீண்டகாலமாக சந்தேகம், பகைமை, குரோதம், அவநம்பிக்கை பரப்பப்பட்டிருந்தது. அந்த நிலையில் தமிழ் மக்கள் தமிழ் கட்சிகளை நோக்கியும் முஸ்லிம் மக்கள் முஸ்லிம் கட்சிகளை நோக்கியும் தள்ளப்பட்டார்கள்**

மக்களுக்கிடையில் நீண்டகாலமாக சந்தேகம், பகைமை, குரோதம், அவநம்பிக்கை பரப்பப்பட்டிருந்தது. அந்த நிலையில் தமிழ் மக்கள் தமிழ் கட்சிகளை நோக்கியும் முஸ்லிம் மக்கள் முஸ்லிம் கட்சிகளை நோக்கியும் தள்ளப்பட்டார்கள். அதன்பின்னர் அந்தக் கட்சிகளின் தோளில் கையைப் போட்டுக்கொண்டு அரசாங்கத்தின் அதிகாரத்தை உறுதிசெய்துகொள்வதற்கான அரசியலை அவர்கள் முன்னெடுத்துவந்தார்கள்.

திருகோணமலை நகரமும் மாவட்டமும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வசிக்கின்ற நிலைமைக்குப் பதிலாக மக்களைப் பிரித்து மோதல்களை ஏற்படுத்தி அவர்களின் ஆட்சியைக் கொண்டு நடத்தினார்கள். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்கான கட்சிதான் தேசிய மக்கள் சக்தி. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் நாம் வெற்றிபெறுவோம் என நம்பவில்லை. அதனால் நாங்கள் பொதுத் தேர்தலுக்குப் பிரவேசிப்பது நாங்கள் வெற்றிபெற்றுள்ள ஒரு பின்புலத்துடன்தான். அனைத்து மக்களும் ஒற்றுமைக்கான ஒரே குடையின் கீழ் வந்து நிழல் பெறவேண்டும். தேசிய மக்கள் சக்தியால் மாத்திரமே அதனை சாதிக்க முடியும். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் நம்புகின்ற அனைத்து மக்களினதும் நல்லாசி கிடைக்கின்ற அரசாங்கத்தை தேசிய மக்கள் சக்தியால் மாத்திரமே நிறுவ முடியும்.

ஜனாதிபதித் தேர்தலின் வெற்றிக்குப் பின்னர் வடக்கிலுள்ள மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தி மீதான பாரிய எழுச்சி தோன்றியுள்ளது. நம்பிக்கை வளர்ந்துள்ளது. பிரிந்து ஒதுங்கியிருந்த யுகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து ஒற்றுமையைக் கொண்ட அரசாங்கத்தை நிறுவ வேண்டிய விசேட பொறுப்பு திருகோணமலை மாவட்ட மக்களுக்கு இருக்கின்றது. சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைவருக்கும் சமமாக அமுலாக்கப்படுகின்ற சட்டத்தைக் கொண்ட ஒரு நாட்டை நாங்கள் கட்டியெழுப்புகிறோம்.

ஒரு சில தடையேற்படுவதும் சட்டங்கள் இருக்குமாயின் அவற்றை மாற்றியமைத்து மக்களின் நன்மைக்காக “நான் இலங்கையன்” என்கின்ற உணர்வைக் கொண்ட ஒரு நாட்டை நாங்கள் கட்டியெழுப்புவோம். “நான் இலங்கையன்” என பெருமையுடன் கூறிக்கொள்ளக் கூடிய பின்புலத்தைத் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் உருவாக்கிக்கொடுக்கும் என்றார்.

# அறுகம்பேயில் அதிரடி பாதுகாப்பு

அறுகம்பேயில் ஹீப்ரு மொழியில் பலகைகள் கொண்ட பல ஹீப்ரு பதிவுகள், கடைகள் மற்றும் உணவகங்கள் தோன்றியதாக செய்திகள் பரவியதாக தனது எக்ஸ் தளத்தில் பெர்னாண்டோ, கடந்த வாரம் கூறினார்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையே நடந்து வரும் மோதலால் இஸ்ரேலியர்கள் மீது விரோதம் உள்ளவர்கள் தாக்குதல் நடத்தாமல் இருப்பதற்காகவே, ‘சினகொக்’ பகுதியில் பொலிஸார் மற்றும் பிரதான வீதிகளில் STF படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

வழிபடுத்தல் படங்களைப் பகிர்ந்த சமூக ஆர்வலர், இது சுவர்கள் அல்லது கதவுகள் அல்லாத மின்விசிறிகள், தகரம் மற்றும் தாள் கூரையுடன் கூடிய கட்டிடம் எனவும் ஒரு மசூதியை அண்டிய பாதையில் அமைந்துள்ளது எனவும் கூறினார்.

மேலும், இரண்டு பொலிஸார் கட்டிடத்திற்குள் இருந்ததாகவும், ஒருவர் கண்காணிப்பு கோபுரத்தின் மீதும் இருப்பதாகவும், பலஸ்தீனத்தைப் பற்றி விசனப்படும் உள்ளூர் வாசிகள் அந்த பகுதியில் இஸ்ரேலின் இருப்பு குறித்து அதிருப்தியாக இருப்பதாகவும் கூறினார்.

# “சகல தரப்பினரும் அவதானம் செலுத்தவும்”

அதே போன்று, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் கிழக்கு ஐரோப்பா நாடுகளில் ஏற்படும் யுத்த நிலைமைகளைக் கருத்திற் கொண்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காக விசேட பாதுகாப்பு வேலைத்திட்டங்களை

நடைமுறைப்படுத்துவதற்காகப் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்புடன் இலங்கை பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவினர்களின் விசேட வேலைத்திட்டங்களினூடாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன்போது, பொலிஸ் சுற்றுலாப் பிரிவை மேலும் பலப்படுத்தப்பட்டு அவற்றை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு சகல பொலிஸ் நிலையங்கலுக்கும் இது தொடர்பாகப் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவினால் விசேட அறிவுறுத்தல் வழங்கப்படவுள்ளது. இதன் முதற்கட்டமாக அனைத்து சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு தொடர்பாகவும் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் தொடர்பாக முறையிட 1997 எனும் விசேட தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தை இன்றைய தினத்திலிருந்து ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா விடுதி உரிமையாளர்கள், அதன் நிருவகிக்கும் குழுவினர்கள். அதே போன்று சுற்றுலாத் துறைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து நபர்களும் தற்போது வரை மேற்கொள்ளப்படும் தங்களது கடமைகள் மிகவும் பாராட்டப்படுவதுடன், எதிர்காலத்தில் சுற்றுலாப் பயணிகளின் உயிர் மற்றும் உடமைகளின் பாதுகாப்பிற்கு தங்கள் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொலிஸார் உறுதியுடன் உள்ளனர்.

எந்தவொரு சந்தர்ப்பங்களிலும் அவர்கள் தனது அதிகார வரையறைக்குப்பட்ட பொலிஸ் பிரதேசங்களில் பொலிஸ் நிலையங்களை ஒருங்கிணைத்து நடவடிக்கை எடுப்பதுடன், எதிர்காலத்தில் இது தொடர்பாக பொலிஸ் நிலையங்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்களும் வழங்கப்படும்.

வெளிப்புற திருடர்கள் மற்றும் எதிரிகளினால் ஏற்படும் அச்சுறுத்தல்கள் போன்று சில ஊழியர்களினால் ஏற்படக் கூடிய துன்புறுத்தல்கள் தொடர்பில் சகல தரப்பினரும் அவதானம் செலுத்தப்பட வேண்டியதுடன், இலங்கை பொலிஸினால் மேற்கொள்ளப்படும் புதிய வேலைத்திட்டங்களுடன் இது தொடர்பாக சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

# அமெரிக்கா, இஸ்ரேல் ரஷ்யா எச்சரிக்கை

அத்துடன், சந்தேகத்துக்கு இடமான செயற்பாடுகள் அல்லது அவசர நிலை குறித்து 119 என்ற இலக்கத்துக்கு அழைப்பை மேற்கொள்ளுமாறு அமெரிக்கத் தூதரகம் கோரியுள்ளது.

இந்நிலையில், கொழும்பில் உள்ள ரஷ்யத் தூதரகம் இலங்கையில் உள்ள ரஷ்யப் பிரஜைகளுக்கு விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

ரஷ்யப் பிரஜைகள் விழிப்புடன் இருக்கவும், நெரிசலான இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அறுகம்பே பகுதியில் வெளிநாட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் அபாயம் இருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், இலங்கை பொலிஸார் உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளதாக கொழும்பில் உள்ள ரஷ்ய தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் இலங்கைக்கான பயண ஆலோசனையையும் புதுப்பித்துள்ளது.

அறுகம்பே பிரதேசத்தில் உள்ள சுற்றுலா மையங்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள பயண ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

# செந்தில் அதிரடி

தமிழர்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றாகத் தீபாவளி கொண்டாடப்படுகிறது. அதனை முன்னிட்டு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு முற்பணமாக 25,000 ரூபாய் வழங்க வேண்டும் என பெருந்தோட்ட நிறுவனங்களுடன் இ.தொ.கா. பேச்சுவார்த்தை நடத்தி, பேச்சுவார்த்தையில் கம்பனிகள் இணக்கம் தெரிவித்ததை அடுத்து வியாழக்கிழமை (24) முதல் முற்பணமாக 25,000 ரூபாய் வழங்கப்படவுள்ளது என செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

# உதயராசாவின் வேட்புமனுவை ஏற்குமாறு உத்தரவு

இதனையடுத்து, பரராஜசிங்கம் உதயராசா மற்றும் இருவரினால் உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

அனைத்து ஆவணங்களும் முறையாக சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் மாவட்ட தேர்தல் அதிகாரி, வேட்பு மனுவை நிராகரித்ததாக மனுதாரர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

மாவட்ட தேர்தல் அலுவலரின் முடிவு சட்டத்திற்கு முரணானது என்று கூறி, அந்த முடிவைச் செல்லாது என்று உத்தரவிடுமாறு மனுதாரர்கள் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர்.

வாதவிவாதங்களைக் கருத்திற்கொண்ட உயர்நீதிமன்றம், பரராஜசிங்கம் உதயராசாவின் வேட்புமனுவை நிராகரிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் சட்டத்திற்கு முரணானது என தீர்ப்பளித்தது.

பரராஜசிங்கம் உதயராசாவின் வேட்புமனுவை அங்கீகரிப்பது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மனுதாரர்கள் சார்பில் மூத்த ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி ஆஜரானார்.

# ஜோன்ஸ்டனுக்கு விளக்கமறியல்

சம்பவம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட வாதங்களை கருத்திற்கொண்ட நீதவான், விபத்துச் சந்தேக நபரை விளக்கமறியலில் வைத்ததுடன், சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றத்தை எதிர்வரும் 30ஆம் திகதி அறிவிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

# ராஜித அசந்தவிற்கு ரூ.09 மில்லியன் அபராதம்

நீதிமன்ற விசாரணைக்கு சமூகமளிக்காத ராஜித அசந்த என்ற நபரின் மூன்று சரீரப் பிணைகளுக்கு 09 மில்லியன் ரூபாய் அபராதம் விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஹெரோயின் கடத்தல் மூலம் ஈட்டிய 10 மில்லியன் சொத்துகள் மற்றும் உடமைகள் குறித்துப் பகிரங்கப்படுத்தத் தவறியதால் ராஜித அசந்த என்பவர் பணச்சலவை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

குற்றம் சாட்டப்பட்டவர் முன்பு நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்ட போது, துஷார இந்திரஜித், அமில பெர்னாண்டோ மற்றும் மொஹமட் இக்ராம் ஆகிய மூவர் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காகப் பிணையில் ஆஜரானார்கள்.

3 பேரும் தலா 10 மில்லியன் மதிப்பிலான பிணைப் பத்திரங்களில் கையெழுத்திட்டுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், பிரதிவாதி தனது வழக்கு விசாரணைகளுக்கு சமூகமளிக்காததால், மூன்று பிணையாளிகளும் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அண்மையில் இடம்பெற்ற நீதிமன்ற விசாரணையின் போது, சந்தேகநபர் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் ஒருவர் பிணையில் ஆஜராகினால், சம்பந்தப்பட்ட நபரை நீதிமன்றில் முன்னிறுத்துவதற்கு உரிய பிணையாளர் சட்டத்திற்குக் கடமைப்பட்டுள்ளார் என கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுட்டிக்காட்டினார்.

மூவரும் குற்றவாளிகளை நீதிமன்றத்தில் முன்னிறுத்தத் தவறியதால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் 03 மில்லியன் ரூபாய் விதிக்கப்பட்டதுடன் மொத்தமாக 09 மில்லியன் அபராதம் விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

### 80 சதவீத தமிழர்கள் வாக்களித்தால்

# பிரதிநிதிகள் இருவரை பெறலாம்

ஹஸ்பர் ஏ.எச்.ஏ.எம்.கீத்

பாராளுமன்றத் தேர்தலில் 80 சதவீதமான தமிழ் மக்கள் வாக்குகளை அளித்தால் இரு பிரதிநிதிகளைப் பெறலாம் என இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற முதன்மை வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலையில் செவ்வாய்க்கிழமை (22) மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்த அவர், தொடர்ந்தும் பேசுகையில்,

தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் இருந்தால் தான் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 1985 முதல் நில அபகரிப்பு செய்யப்பட்ட விவசாய மக்கள் காணிகளை மீளப் பெறலாம். வன இலாகா 4,000க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களையும், தொல்பொருள் திணைக்களம் 2,600 ஏக்கர்களையும் இது போன்று இலங்கை துறை முக அதிகார சபை ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர்களையும் பௌத்த பிக்குகள் விகாரைக்கான கட்டுமானம் என்ற போர்வையில் பல நிலங்களை அபகரித்துள்ளனர்.

இதனை மீட்கத் தமிழ் மக்களுக்கான பிரதிநிதிகள் தேவை. எனவே தான் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே குடையின் கீழ், செயற்படுவதுடன் ஊடாக திருகோணமலை மாவட்டத்தில் இரு ஆசனங்களைப் பெறலாம்.

வாக்குகளை அளிப்பதற்காக மக்களை ஊக்கப்படுத்த வேண்டும் இஸ்லாமியர்கள் 80 சதவீதமான வாக்குகளை அளிக்கின்றனர். தமிழ் மக்கள் 65 சதவீதமான வாக்குகளையே அளிக்கின்றனர். எனவே, இம் முறை 85 சதவீதமான வாக்குகளை அளிக்க வேண்டும். அப்போது தான் நம் மண்ணின் தமிழ் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட்டு உரிமைகள் அபிவிருத்திகளைப் பெறமுடியும் என்றார்.

பாடசாலை மாணவி வன்புணர்வு;

# இளம் ஆசிரியர் கைது

திம்புலாகலை-வெலிகந்த கல்விப் பிரிவுக்குட்பட்ட பாடசாலை ஆசிரியர் ஒருவர் 16 வயது பாடசாலை மாணவியை வீட்டுக்கு அழைத்துச் சென்று பலமுறை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், செவ்வாய்க்கிழமை (22) அன்று ஆசிரியரைக் கைது செய்ததாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் அனுராதபுரத்தில் இருந்து குறித்த பாடசாலைக்கு கணிதம் கற்பிக்க வந்த 25 வயதுடைய திருமணமாகாத நபர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கணித ஆசிரியருடன் சிறுமிக்கு இருந்த உறவு குறித்தும் ஆசிரியரால் சிறுமி வன்புணர்வு செய்யப்பட்ட சம்பவங்கள் குறித்தும் தனது தோழியுடன் பேசிய தொலைபேசி ஒலிப்பதிவையும் பெற்றோர்கள் பொலிஸில் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேக நபரான ஆசிரியரைக் கைது செய்து தண்டிக்காவிட்டால் இது தொடர்பில் பிரதமர் மற்றும் சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களுக்கும் அறிவித்து, அப்பகுதியில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பிற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் பொலிஸாரிடம் பெற்றோர் கூறியுள்ளனர்.

குறித்த சிறுமி வெலிகந்த பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பரிசோதனைகளுக்காக பொலன்னறுவை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலன்னறுவை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆலோசனையின் பேரில் வெலிகந்த பொலிஸ் அதிகாரிகள் குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாடியில் இருந்து விழுந்து மாணவன் பலி

களனி பல்கலைக்கழக சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கர விடுதியின் நான்காம் மாடியில் இருந்து தவறி விழுந்து மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 23ஆம் திகதி அதிகாலை இடம்பெற்ற இந்த விபத்தில் ரிதிமாலியெத்த பிரதேசத்தைச் சேர்ந்த களனி பல்கலைக்கழகத்தின் வர்த்தக மற்றும் முகாமைத்துவ பீடத்தின் நான்காம் வருட மாணவன் பிரின்ஸ் ராஜு பண்டார உயிரிழந்துள்ளார்.

பல்கலைக்கழகத்தில் சாண்டா என்று அன்புடன் அழைக்கப்பட்ட மாணவன், கன்னங்கர விடுதியின் அறை எண் 416இல் தங்கியிருந்தார். படுகாயமடைந்த மாணவன் கிரிபத்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிரிபத்கொட பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.





# தங்கப் பதக்கங்களுடன் வந்தடைந்தனர்

மலேசியாவில் நடைபெற்ற எம்.ஏ.எம். மலேசியா ஒஃப் ஸ்பீட் 2024 (M.A.M.Malaysia Festival of Speed - 2024) சர்வதேச மோட்டார் பந்தயப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பங்கேற்று 02 தங்கப் பதக்கங்களை வென்ற ஷெஹான் குணசேகர மற்றும் டெஹான் அமரசிறி ஆகிய இருவரும் செவ்வாய்க்கிழமை(22) பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்தப் போட்டி மலேசியாவில் உள்ள செப்பபான் நகரில், 10 உலக நாடுகளைச் சேர்ந்த சிறிய கார் பந்தய சாம்பியன்களுக்கிடையில் ஞாயிற்றுக்கிழமை (20) நடைபெற்றது.

15 வயதுக்குட்பட்ட கனிஷ்ட பிரிவின் கீழ், போட்டியிட்ட 14 வயதுடைய ஷெஹான் குணசேகரவும் 13 வயதுக்குட்பட்ட கேடட் பிரிவின் கீழ் போட்டியிட்ட 11 வயதுடைய டெஹான் அமரசிறியுமே இவ்வாறு தங்கப் பதக்கங்களை வென்றுள்ளனர் .

இந்த போட்டிக்கான கார்களை ஓட்டுவதற்கு இந்த மாணவர்கள் இருவருக்கும் சர்வதேச மோட்டார் பந்தய சங்கத்தினால் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

# 5 சிறுவர்கள் துஷ்பிரயோகம்; பிக்கு கைது

பிரபல பாடசாலை ஒன்றின் ஐந்து மாணவர்களைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் அப்பகுதியிலுள்ள விகாரை ஒன்றின் பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டதாக கலவான பொலிஸார் தெரிவித்தனர்.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்கள் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து, கலவானை பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் கலவானை பொலிஸார் பிக்குவை கைது செய்துள்ளதாக கலவானை பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதே பாடசாலைக்கு அருகாமையில் குறித்த விகாரை அமைந்துள்ளதுடன், குறித்த பாடசாலையில் 9ஆம் தரத்தில் கல்வி கற்கும் ஐந்து சிறுவர்கள் இவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மருத்துவ பரிசோதனைக்காக கலவானை ஆதார வைத்தியசாலையில் சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கலவானை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கலவான பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் வசந்த ஹேரத் தலைமையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# 20 லீட்டர் கசிப்புடன் நால்வர் கைது

■ செ.தி.பெருமாள்

சட்ட விரோதமாக முறையில் கசிப்பு தயாரித்த நால்வர் மஸ்கெலியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள மொக்கா தோட்ட மிட்லோதியன் பிரிவைச் சேர்ந்த 35 முதல் 45 வயதுக்கு உட்பட்ட நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது, 20 லீட்டர் கசிப்பு மற்றும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.















# உளநல தின வீதி நாடகம்

■ வி.ரி.சகாதேவராஜா

மண்முனை- தென்எருவில்பற்று பிரதேச செயலகத்தினால் தேசிய தேசிய உளநல தினத்தை முன்னிட்டு, அலுவலக உத்தியோகத்தர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட வீதி நாடகம் பிரதேச செயலக முன்றிலில் செவ்வாய்க்கிழமை அ (22) இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னம் மற்றும் உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் 'பணியிடத்தில் மனநலத்திற்கு முன்னுரிமை அளிக்கவேண்டிய நேரம் இது' எனும் தலைப்பிலான இந்த வீதி நாடக நிகழ்வினை தேற்றாத்தீவு மகா வித்தியாலய மாணவர்கள் ஆற்றுகை செய்திருந்தனர்.

குறித்த நிகழ்வில் வேலைத்தளங்களில் ஏற்படும் மன அழுத்தங்கள் மற்றும் அதிலிருந்து விடுபடுவதற்கான வழிகாட்டல்களையும் சிறப்பான முறையில் மாணவர்கள் ஆற்றுகை செய்திருந்ததுடன், அவர்களுக்கான பாராட்டு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அலுவலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்ததுடன், இந்த நிகழ்வினை பிரதேச செயலக உளவளத்துணை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி என். கோகிலா ஒழுங்கமைப்பு செய்திருந்தார்.

மேலும், உளநல தினத்தினை முன்னிட்டு பாடசாலைகள் மற்றும் பொது இடங்களிலும் உளநலத்தினை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்கு செய்து நடாத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டவர்கள்

# 10 பேருக்கு வாழ்நாள் சிறை

சுமார் 146 கிலோ கிராம் போதைப்பொருளை வைத்திருந்த மற்றும் கடத்திய குற்றத்திற்காக வெளிநாட்டவர்கள் 10 பேருக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

ஈரானிய பிரஜைகள் பத்து பேர், மற்றும் ஒரு பாகிஸ்தானியர் ஆகியோருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த 10 வெளிநாட்டவர்களுக்கு எதிராக 2016ஆம் ஆண்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.





# சங்கு சின்ன வேட்பாளர்களுக்கு வரவேற்பு

■ வி.ரி.சகாதேவராஜா

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் வெற்றிக்காக உவெஸ்லியன் 78, 82 சமூக அமைப்பின் ஏற்பாட்டில் விசேட பூசை வழிபாடு நிகழ்வுகள் கல்முனை புலவிப் பிள்ளையார் ஆலயத்தில் புதன்கிழமை (23) இடம்பெற்றது.

அங்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அம்பாறை மாவட்டத்திலே போட்டியிடுகின்ற வேட்பாளர் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் நாவிதன்வெளி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான சோ.புஷ்பராசா மற்றும் கி.லிங்கேஸ்வரன், த.துரைசிங்கம் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்பு அளிக்கப்பட்டது.

நிகழ்வில் கல்முனை புத்திஜீவிகள் வெஸ்லியன் 78, 82 சமூக அமைப்பின் உறுப்பினர்கள், உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து கல்முனை பிரதான வீதிகளில் உள்ள வியாபார ஸ்தலங்களுக்குத் தேர்தல் பரப்புரையினையும் இவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

# இரத்மலானையில் துப்பாக்கிச் சூடு

இரத்மலானை ரயில்வே வேலைத்தளத்தில் புதன்கிழமை(23) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையடிக்கும் நோக்கில் 5 பேரடங்கிய குழுவினர் ரயில்வே வேலைத்தளத்திற்குள் பிரவேசித்து, அங்குப் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரைத் தாக்கி காயப்படுத்தியுள்ளனர்.

இதன்போது, ரயில்வே பாதுகாப்பு அதிகாரி, சந்தேக நபர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளார். இந்த துப்பாக்கிச் சூட்டில் சந்தேகநபர்களில் ஒருவர் காயமடைந்துள்ளதுடன் ஏனைய சந்தேகநபர்கள் தப்பியோடிவிட்டனர்.

சந்தேகநபர்களின் தாக்குதலில் காயமடைந்த ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சந்தேக நபரும் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர்.

# தீ குளிக்க முயன்ற சிறுவன்

■ எஸ்.சதீஸ்

பொகவந்தலாவை, ஜெப்பல்டன் என்.சீ.தோட்டப் பகுதியில் வசிக்கும் 12 வயது சிறுவன், தனக்குத் தானே தீ குளிக்க முயன்ற சம்பவம் செவ்வாய்க்கிழமை (22) இரவு 10 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தந்தையும் தாயும் ஒவ்வொரு நாளும் சண்டை போட்டுக் கொள்வதாகவும் சம்பவ தினத்தன்று இருவருக்கிடையில் சண்டை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், தாயாரைத் தாக்கினால் தான் தீ வைத்துக் கொள்வதாகக் கூறி எச்சரித்த சிறுவன், தனக்கு தானே தீ வைத்துக் கொண்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

தீக்காயங்களுக்கு உள்ளான சிறுவன், பொகவந்தலாவ, மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அச்சிறுவன், பாடசாலைக்கு செல்வதில்லை என்றும் கூறப்படுகின்றது.

# வாழ்க்கைப் பிரச்சினையில் வாடும் நாட்டுக்காரன்

பொருட்களின் விலைகள் உயர்வால் வாழ்க்கைப் பிரச்சினை எழுகிறது. எண்ணெய் விலை உயர்வு காரணமாக எரிவாயு விலை அதிகரிப்புடன், அன்றாடம் தேவைப்படும் பல்வேறு சேவைகளைப் பெறுவதில் அதிக விலையைச் சுமக்க வேண்டியதன் மூலம், தினசரி பயணத்திற்கு அதிக செலவுகளுக்குத் தயாராக வேண்டும்.

அதைச் செலவு செய்ய முடியாத மக்களும் அதிக வரிச் சுமைகளைச் சுமக்க வேண்டியிருக்கும். அந்த சுமையைக் குறைத்து புதிய மாற்றத்திற்கு செல்லவே மக்கள் 9ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக அனுரகுமாரவை தெரிவு செய்தனர். வெளிப்படையாக இப்போது நிறைய மாறுகிறது. ஆனால், பழைமைவாத ஆட்சியின் சில வடிவங்கள் இன்னும் கைவிடப்படவில்லை.

நாட்டில் நடக்கும் அனைத்திற்கும் ஒரு குழுவை நியமிப்பது மட்டுமே தீர்வா? குழுக்களை நியமிப்பதன் மூலம் மட்டுமே எரியும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமா? இந்நாட்டின் அரசியல் வரலாற்றை ஆராயும் போது, கடந்த அரசாங்கங்கள் வழங்கிய மிகவும் பாரதூரமான பிரச்சினைகள் மற்றும் பிரச்சினைகள் மிகவும் எளிமையானவை மற்றும் எளிதானவை.

ஒரு குழு ஒரு அறிக்கையைத் தயாரிக்கக் கணிசமான நேரத்தைச் செலவிடுகிறது. அந்த அறிக்கைக்குத் தேவையான தரவைக் கண்டுபிடித்துச் சேகரிக்க மற்றொரு முறை. அறிக்கையைச் சமர்ப்பிக்கும் முன் தயாரிப்பதற்கு அதிக நேரம் உள்ளது. அதை நடைமுறைப்படுத்துவது உடனடியாக சாத்தியமில்லை. அப்படியானால் நாட்டின் எரியும் பிரச்சினைகளைக் குழுக்களால் தீர்க்கப் போகும் பரிகாரம் ஏற்கெனவே காலாவதியாகிவிட்டதல்லவா?

பல திட்டங்களுக்கு நிதி தேவைப்படுவது பொய்யல்ல. அப்படியானால், அவ்வாறான நிதியில்லாமல் நடைமுறைப்படுத்தக்கூடிய செயற்பாடுகள் இந்த நாட்டில் இல்லையா? இதுபோன்ற பல நடவடிக்கைகள் உள்ளன என்பதே எங்கள் கருத்து.

விலைக் கட்டுப்பாடு அத்தகைய திட்டங்களில் ஒன்றாகும். புதிய ஜனாதிபதி பணியைத் துவக்கியதால், முட்டை விலை குறைந்தது. இரண்டு மூன்று நாட்கள் கழிந்தன. குறைக்கப்பட்ட விலை மீண்டும் உயர்ந்தது. என்ன நடக்கிறது? இந்த ஏற்றத் தாழ்வுகளுக்குப் பின்னால் உள்ள மாபியா அல்லவா விசாரிக்க வேண்டும்?

அன்றாடம் தவிர்க்க முடியாத அரிசி இன்னும் கையாள முடியாத அளவில் விற்கப்படுகிறது. உர மானியம் விவசாயிகளுக்கு ஓரளவு நிவாரணம் அளித்துள்ளது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால், இந்த நாட்டு மக்கள் அனைவரும் விவசாயிகள் அல்ல. நிவாரணத்திற்குத் தகுதியானவர்கள் இன்னும் பலர் உள்ளனர். அந்த மக்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்கக்கூடிய நன்கு அறியப்பட்ட முறை பொருட்களின் விலையைக் குறைப்பதாகும்.

நிறைவேற்று ஜனாதிபதி பலமான பாராளுமன்றத்தை உருவாக்கி, பலமான அமைச்சரவையை உருவாக்குவதை எதிர்நோக்குவார், அனைத்தும் முடிந்த பின் மக்களை மகிழ்விக்க ஆரம்பிக்க வேண்டும்.

குழுக்களை நியமிப்பது தற்காலிக ஆறுதலாகவே தெரிகிறது. ஆனால் ஒரு பிரச்சனை இருக்கிறது. அரசாங்கம் தன்னால் முடிந்ததைச் செய்து, பயனற்ற குழுக்களுடன் அதிகப் பணத்தையும் நேரத்தையும் உழைப்பையும் வீணாக்க வேண்டுமா?

ஒரு அமைதியான சூழல் உருவாகியிருக்க வேண்டும். அதற்குப் பொருட்களின் விலையைக் குறைப்பது இன்றியமையாத நிபந்தனையாகும். மற்ற சலுகைகள் பின்வருமாறு. அரசாங்கம் எண்ணெய் விலையைக் குறைத்துள்ளது. இது பொருட்களின் விலையைக் குறைக்கும் முயற்சி என்று தெரிகிறது. மக்கள் சுகபோக வாழ்க்கை வாழ ஆட்சியாளர்கள் வழிகாட்டி உதவ வேண்டிய காலம் வந்து விட்டது.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

சுய நலமில்லாமல் வாழ்பவர்களைப் பலர் சுரண்ட நினைக்கின்றார்கள். உறவுகளை, உதவுபவர்களை எளிதாக ஏமாற்றுபவர்கள், தங்களை தாங்களே சிறுமைப்படுத்துகின்றனர்.

இத்தனை நடந்த பின்னரும் கூட, தாராள மனம் படைத்தோர் தங்களது நல்ல செயல்களை நிறுத்துவதும் இல்லை.

இந்த உலகில் எல்லாமே நடக்கும். பெற்றோரை மதிக்காத பிள்ளைகள், ஆசானை மறந்த மாணவர்கள், கொடுத்தவர்களுக்கே துரோகம் செய்யும் எத்தர்கள் என ஏராளமான பிரகிருதிகள் எம்மோடு வாழ்ந்தபடியே நடமாடுகின்றனர்.

சந்தோஷமாகக் கோவில் திருவிழாவை மக்கள் கொண்டாடும் போது. அங்கேயும் திருடர் கூட்டம் தங்கள் கைவரிசையைக் காட்டுகின்றனர். எப்படி எச்சரிக்கை செய்தாலும் மக்கள் அதனைக் கேட்காமல் பணம், பொருள்களைத் துஷ்டர்களிடம் இழக்கின்றார்கள்.

நல்வாழ்வு கெட்டவர்களுக்குப் பிடிக்காது. குற்றச்செயல்களை தங்களின் நிரந்தர தொழிலாகக் கொண்டவர்கள், திருந்துவது இல்லை. முற்காலத்தில் அரசர்கள், திருடர்களை எத்தர்களை மன்னிப்பதில்லை.

பெரும் தண்டனை வழங்குவார்கள். உலக அமைதி தீயோர்களை களைவதில் தங்கியுள்ளது.

நன்றி-பருத்தியூர் பாலவைரவநாதன்

# 'மக்களின் மறதி' வரைக்குமானதே

முருகானந்தம் தவம்

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் 196 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 22 தேர்தல் மாவட்டங்களிலும் 8,352 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர்.
22 தேர்தல் மாவட்டங்களிலும் மொத்தமாக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களின் சார்பாக 764 குழுக்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்த நிலையில் அவற்றில் 74 குழுக்களின் வேட்பு மனுக்கள் பல்வேறு காரணங்களால் நிராகரிக்கப்பட்டதால். 690 குழுக்கள் தேர்தல் களத்தில் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

அதாவது 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் 196 ஆசனங்களை வெற்றி கொள்வதற்காக இடம்பெறவுள்ள இந்த தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 5,006 வேட்பாளர்களும் 3,346 சுயேச்சைக்குழு வேட்பாளர்களும் களமிறங்கியுள்ளனர். இவர்களுக்கு 17,140,354 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இது நாட்டிலுள்ள 2,052 வாக்காளர்களுக்கு ஒரு வேட்பாளர் என்ற நிலையை உருவாக்கியுள்ளது.

மேலும், 29 தேசியப் பட்டியல் பாராளுமன்ற ஆசனங்களுக்காக 469 உறுப்பினர்களை அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் முன்மொழிந்துள்ளன. இது ஒரு ஆசனத்துக்கு 16 தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் என்ற போட்டியை உருவாக்கியுள்ளது. இவ்வாறு கடும் போட்டிகளுக்கு மத்தியில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளதால் பிரசாரங்கள், வாக்குறுதிகள், சேறடிப்புகள், இன, மதவாதங்கள், பொய், பித்தலாட்டங்கள் என தேர்தல் களம் அதிர்ந்து கொண்டிருக்கின்றது.

கடந்த 2020இற்கான பாராளுமன்றத் தேர்தலில் 196 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 22 தேர்தல் மாவட்டங்களிலும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் சார்பாக 7,452 வேட்பாளர்கள் களமிறங்கிய நிலையில், அந்த வேட்பாளர் எண்ணிக்கை நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் 936 வேட்பாளர்களினால் அதிகரித்துள்ளதுடன் இம்முறை போட்டியிடும் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கையும் பெருமளவில் அதிகரித்தே காணப்படுகின்றது.

இவ்வாறு ஒரு புறம் எப்பாடுபட்டேனும் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகிவிட வேண்டுமென்ற கனவில், ஆசையில், கொள்கையில் பலர் புதிதாக அரசியல் களம் புகுந்துள்ள நிலையில் மறுபுறம் ஏற்கெனவே பாராளுமன்ற உறுப்பினராக, பிரதி அமைச்சர்களாக இராஜாங்க அமைச்சர்களாக, அமைச்சர்களாகப் பிரதமராக, ஜனாதிபதியாக இருந்து அரசியலில் பழம் தின்று கொட்டை போட்ட பலரும் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கியுள்ளமை மக்கள் மத்தியில் ஆச்சரியத்தையும் சந்தேகங்களையும் எழுப்பியுள்ளது.

இவ்வாறு இலங்கையின் 9ஆவது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய மக்கள் வாக்களிப்பு மூலம் தெரிவான 196 எம்.பிக்கள் ,தேசியப்பட்டியல் மூலம் தெரிவான 29 எம்.பிக்கள் உள்ளிட்ட 225 எம்.பிக்களில் 58 எம்.பி.க்கள் எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் 10 ஆவது பாராளுமன்றத்திற்கான தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கிக் கொண்டுள்ள நிலையில் தாம் தேர்தலில் போட்டியிடாமைக்கான சரியான , தெளிவான காரணங்களை இவர்களில் பலரும் வெளியிடவில்லை.

இந்த 58 எம்.பிக்களில் பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன, முன்னாள் பிரதமரும் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவருமான தினேஷ் குணவர்தன, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரான நீதியரசர் விக்னேஸ்வரன், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச, ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவரான வாசுதேவ நாணயக்கார, ஐக்கிய குடியரசு முன்னணித் தலைவரான சம்பிக்க ரணவக்க, முன்னாள் சபாநாயகர்களான சமல் ராஜபக்ஷ, மஹிந்த யாப்பா அபேவர்தன உள்ளிட்ட பிரபலமானவர்கள் பலர் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவும் இல்லை. இவர்களில் தினேஷ் குணவர்தனவைத் தவிர்ந்த வேறு எவரினது பெயர்களும் தேசியப் பட்டியலில் இடம்பெறவுமில்லை.

இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாதவர்களில் கடந்த பாராளுமன்றத்தில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய நீதியரசர் விக்னேஸ்வரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், வினோநோகராத லிங்கம் ஆகிய தமிழர்களும் அலிசப்ரி, நஸீர் அஹமட், பௌசி, முஹமட் முஸம்மில், ஹரிஸ் ஆகிய முஸ்லிம்களும் உள்ளடங்குகின்றனர். அத்துடன், நடைபெறவுள்ள தேர்தலில் ராஜபக்ஷ குடும்பத்திலிருந்து சமல் ராஜபக்ஷவின் மகனான முன்னாள் அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ போட்டியிடும் நிலையில் மஹிந்த ராஜபக்ஷவின் மகனான முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியலில் பெயரிடப்பட்டுள்ளார். ஏனையவர்களான மஹிந்த ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ என எவருமே போட்டியிடவில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என 2022 மார்ச் இறுதியில் வெடித்த 'அரகலய' மக்கள் புரட்சியில் முக்கிய கோஷம் முன்வைக்கப்பட்ட நிலையிலும் இளைஞர்களுக்கும் புதியவர்களுக்கும் பெண்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படும் தற்போதைய நிலையிலும், ஏற்கெனவே பாராளுமன்ற உறுப்பினர்களாகவிருந்த பலர் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாமல் தவிர்ப்பது போராட்டக்காரர்களின் கோஷத்துக்கு மதிப்பளித்தா? அல்லது இளைஞர்களுக்கும் புதியவர்களுக்கும் வழிவிடுவதற்காகவா என்ற கேள்வி உள்ளது.

அத்துடன், அரசியலில் ஆண்ட பரம்பரையான ராஜபக்ஷ சகோதரர்களில் ஒருவர் கூட நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாதுள்ளமை மக்களுக்கு மகிழ்ச்சியையும் 'அரகலய' போராட்டக்காரர்களுக்கு தமது போராட்டத்தின் நோக்கம் நிறைவேறிவிட்டது என்ற பெருமிதத்தையும் கொடுத்துள்ளதுடன் 'ராஜபக்ஷ குடும்ப ஆட்சி' இனி இலங்கை அரசியலில் இல்லை என்ற ஒரு தோற்றப்பாட்டையும் நாட்டில் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாது விலகியவர்களில் சிலர் நாம் இளைஞர்களுக்கும் புதியவர்களுக்கும் வழிவிட வேண்டும். அவர்களுக்குப் பின்னால் நின்று அவர்களை வழிநடத்த வேண்டும் என்பதற்காகவே எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை என கதை அளக்கின்றனர். அந்தளவுக்கு எமது அரசியல்வாதிகள் சிந்திக்கக் கூடியவர்களுமல்ல, விட்டுக்கொடுக்கக் கூடியவர்களுமல்ல, நல்லவர்களுமல்ல. சிறந்த நடிகர்கள், நரித்தனமானவர்கள், நாணயமற்றவர்கள்.

மருத்துவத்துறையில் பயிலும் பயிற்சி மருத்துவர்களுக்கு மூத்த மருத்துவர்கள் வழங்கும் அறிவுரை ஒன்றுள்ளது. இது மருத்துவர்களுக்கு மட்டுமன்றி அனைத்து துறையினருக்கும் பொருந்தக்கூடியது. 'ஒரு சத்திர சிகிச்சையை செய்து முடிப்பவர் நல்ல மருத்துவர், ஒரு சத்திர சிகிச்சையை எப்போது செய்ய வேண்டுமெனத் தெரிந்தவர் சிறந்த மருத்துவர், ஒரு சத்திர சிகிச்சையை எப்போது செய்யக்கூடாது என்பதைத் தெரிந்தவரே அதி சிறந்த மருத்துவர்' என்பதே அந்த மூத்த மருத்துவர்களின் அறிவுரை.
ஏனெனில், செய்யக்கூடாத நேரத்தில் சத்திர சிகிச்சையை செய்தால் 'சத்திர சிகிச்சை வெற்றி நோயாளி மரணம்' என்ற கதையாகிவிடும்.

ஆக, அந்தவகையில், தான் தற்போது எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத்துக்கான தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கியுள்ள இந்த 58 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெருமளவானோர் 'ஒரு சத்திர சிகிச்சையை எப்போது செய்யக்கூடாது என்பதைத் தெரிந்த அதி சிறந்த மருத்துவர்' போன்றவர்களேயாவர். இந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களில் பலரும் தற்போதைய பாராளுமன்றத் தேர்தலில் தாம் போட்டியிட்டால் என்ன நடக்கும் என்பதை நன்றாகவே அறிந்தவர்கள். அதனால்தான் கௌரவமாக ஒதுங்கியுள்ளனர்.

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற இவர்களின் முடிவு நிரந்தரமானதல்ல. தற்காலிகமானது. விக்னேஸ்வரன், வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் வயது மூப்பின் காரணமாக இவ்வாறான முடிவை எடுத்திருந்தாலும் ராஜபக்சக்கள் ஒருபோதுமே இவ்வாறான நிரந்தர முடிவை எடுக்க மாட்டார்கள். அவர்கள் இலங்கையின் அரசியலுக்கமைய தம்மை மாற்றிக்கொண்டவர்கள் அல்ல, தமக்கு ஏற்றாற்போல் இலங்கை அரசியலை மாற்றியவர்கள். அவர்களின் ஒதுங்கல் என்பது அடுத்த பாய்ச்சலுக்கான தற்காலிக ஓய்வு.

ராஜபக்ஷ குடும்பத்தின் மீது நாட்டு மக்களுக்கு தற்போதுள்ள கோபம், விரக்தி, வெறுப்பு, பகையை நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகனும் ராஜபக்ஷ பரம்பரையின் முக்கிய விழுதுமான நாமல் ராஜபக்சவுக்கு கிடைத்த வாக்குகள் மூலம் உணர்ந்து கொண்டதாலும் பாராளுமன்றத் தேர்தலிலும் ராஜபக்ஷக்களின் தோல்வி உறுதி என்பதனை தெரிந்த கொண்டதாலுமே ராஜபக்ஷக்கள் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கி 'மக்களின் மறதி'க்காக அடுத்த பாராளுமன்றத் தேர்தல் வரை காத்திருக்க முடிவு செய்துள்ளனர்.

இது ராஜபக்ஷக்களின் குடும்பத்தின் முடிவு மட்டுமல்ல, இந்த 58 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களில் பலரினது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கும் முடிவும் நிரந்தரமானதல்ல. 'மக்களின் மறதி' வரைக்குமானதே.

## கடிதங்கள்

### கட்டாக்காலி மாடுகளின் தொல்லை

மட்டக்களப்பு- காத்தான்குடி நகர சபை பிரிவில் வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் காரணமாகப் பொதுமக்களும் வாகன சாரதிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர் .

கடைத்தெருக்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகம் நிறைந்த பிரதான வீதிகளில் அதிக அளவிலான கட்டாக்காலி மாடுகள் வீதியின் நடுவே கூட்டம் கூட்டமாகச் செல்வதனால் வாகன சாரதிகள் வாகனங்களைச் செலுத்த முடியாமல் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்

குறித்த கட்டாக்காலி மாடுகள் பகல் நேரங்களிலும் வேலைப்பளு மிக்க நேரங்களிலும் வீதிகளில் அதிக அளவில் நடமாடுவதை அவதானிக்க முடிகின்றது

இதனால் வாகன விபத்துகளும் சம்பவிப்பதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய, கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

- ரீ.எல்.ஜவ்பர்கான்






# ‘நடிகையர் திலகம்’

**இயக்கம்: நாக் அஸ்வின்**
**தயாரிப்பு: வைஜெயந்தி மூவிஸ் ஸ்வப்னா சினிமாஸ்**
**ஒளிப்பதிவு: டேனி சா-லோ**
**இசை: மிக்கி ஜெ மேயர்**

**இ.நிரோஷிகா,**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

கீர்த்தி சுரேஷ், துல்கர் சல்மான், சமந்தா, விஜய் தேவரகொண்டா, ராஜேந்திர பிரசாத், பிரகாஷ் ராஜ், பானுப்பிரியா, மாலிகா நாயர், ஷாலினி பாண்டே ஆகியோர் நடித்துள்ளனர்.

இப்படமானது, நடிகை சாவித்திரியின் வாழ்க்கை (biography film) வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டே எடுக்கப்பட்டுள்ளது.

1981 மே 11ஆம் திகதி பெங்களூரில் நடிகை சாவித்திரி கோமாவில் விழுந்த நாளிலிருந்து ஆரம்பிக்கிறது படம். அவரைப் பற்றிய கட்டுரை எழுதப் பணிக்கப்படுகிறார் மக்கள்வானி பத்திரிக்கை நிருபர் மதுரவானி (சமந்தா). முன்பக்க தலைப்பு செய்தி எழுத வேண்டும் என்ற ஆசையில் இருக்கும் சமந்தாவுக்கு கோமாவில் கிடக்கும் ஒரு பழைய நடிகையைப் பற்றி செய்தி சேகரிக்க விருப்பமில்லை.

இருப்பினும் ஆசிரியரின் உத்தரவை ஏற்று, புகைப்படக்கலைஞர் ஆண்டனியுடன் (விஜய் தேவரகொண்டா) சாவித்திரியின் அண்ணா நகர் வீட்டுக்குச் செல்கிறார். அங்கிருந்து ஆரம்பமாகிறது சாவித்திரியின் வாழ்க்கை... முதல் காட்சியிலேயே அசல் சாவித்திரி போல் அசத்துகிறார் கீர்த்தி சுரேஷ். குழந்தை சாவித்திரியில் தொடங்கி, அவர் எப்படி சினிமாவுக்குள் வந்தார், எங்கெல்லாம் வாய்ப்பு தேடி அலைந்தார், சாவித்திரிக்கு கிடைத்த முதல் வாய்ப்பு, அதை அவர் தக்க வைக்கத் தவறியது, ஜெமினி கணேசனுடனான காதல், புகழின் உச்சி, ஜெமினியின்

துரோகம், மதுவுக்கு அடிமையாகி கிடப்பது, அதிலிருந்து மீண்டு வருவது என ஒரு பெண் நிருபரின் பார்வையில் சாவித்திரியின் வாழ்க்கையை அழகாகக் காட்சிப்படுத்தி இருக்கிறார்.

இந்த படத்தை முழுவதுமாக தாங்கிப்பிடித்திருப்பவர்கள் கீர்த்தி சுரேஷும், துல்கர் சல்மானும் தான். கீர்த்தி சுரேஷ் தன்னை சாவித்திரியாகவே மாற்றிக் கொண்டிருக்கிறார். சாவித்திரியாகவே வாழ்ந்திருக்கிறார். பல காட்சிகளில் கீர்த்தி சுரேஷ் தெரிவதேயில்லை. அவ்வளவு இயல்பாக சாவித்திரியை உள்வாங்கி, வெளிக்காட்டி இருக்கிறார். சிரிப்பது, அழுவது, குறும்பு, தேவதாஸ் பார்வதி, ஜெமினியின் காதலி, மனைவி, மதுவுக்கு அடிமையானவள் என நமக்கு இன்னொரு சாவித்திரி கிடைத்துவிட்டதாகவே தோன்றுகிறது. வருங்காலங்களில் சாவித்திரி என்றவுடன் கீர்த்தி சுரேஷின் முகம் ஞாபகத்துக்கு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்தளவுக்குச் சாவித்திரியாகவே மாறியிருக்கிறார் கீர்த்தி சுரேஷ்.

ஜெமினி வேடத்தில் நடித்திருக்கும் துல்கர் சல்மானும், அப்படியே அசல் ஜெமினியை திரையில் கொண்டு வந்திருக்கிறார். சாவித்திரியைக் காதலிப்பது, தனக்கு ஏற்கனவே திருமணமான விடயத்தைச் சாவித்திரியிடம் சொல்வது, திருமணத்துக்குப் பிறகு ஈகோ காரணமாக வாழ்வை தொலைப்பது என இயல்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

இவர்களைத் தாண்டி படத்தின் அத்தனை பெருமையும் போய்ச் சேர வேண்டும் என்றால் அது ஒளிப்பதிவாளர் டேனி சா-லோவுக்கும், ஆடை வடிவமைப்பாளர்கள் கௌரங், அர்ச்சனா ராவ், இந்திராக்ஷி பட்னாயக் ஆகியோருக்கு தான். அவர்களின் அபாரமான உழைப்பு




படத்தில் அப்படியே தெரிகிறது. கலை இயக்குநர் ஆவினாஷ் கொல்லாவின் செட் வேலைப்பாடுகளும் அற்புதமாக இருக்கிறது. விஜயவாஹினி ஸ்டுடியோ, ஜெமினி ஸ்டுடியோ, டிராம்ப் என அந்த கால மதராசுக்கு நம்மை அழைத்து சென்றிருக்கிறார்.

இந்த படக்குழுவின் கெப்டன் இயக்குநர் நாக் அஸ்வினுக்கு பாராட்டுக்கள் பல. இளைய தலைமுறையின் பார்வையில் ஒரு அற்புதமான நடிகையின் வாழ்க்கையை மிகத் துல்லியமாகக் காட்டியிருக்கிறார். ஆனால், தெலுங்கு ஆடியன்சை மட்டுமே மனதில் வைத்துப் படத்தை எடுத்திருப்பார் போல. சாவித்திரி என்றவுடன் நம் அனைவரின் நினைவுக்கு வருவது பாசமலர் படம் தான். ஆனால் ஏதோ ஒரு நகரும் மேகம் போல, மலர்ந்தும் மலராத பாடலின் இரு வரிகளுடன் கடந்து போய்விடுகிறது பாசமலர் படத்தைப் பற்றிய காட்சிகள். அதைக் கொஞ்சம் அதிகமாக்கி இருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். கீர்த்தி சுரேஷின் நடிப்பிற்காகவே இன்னொருமுறை பார்க்கலாம் ‘நடிகையர் திலகம்’. நடிகையர் திலகம், வெற்றித்திருமகள்.

# தமிழ்த் தேசிய தொங்குபால அரசியல்

## ஒரு பொதுப் பார்வை



கலாநிதி மு.ந.சிவச்செல்வன்,
இளைப்பாறிய பேராசிரியர்,
ஒக்லேண்ட்-நியூஸிலாந்து.

குறிப்பு: இந்த தலைப்பில், ஒகஸ்ட் 23ஆம் திகதியன்று வெளியான கட்டுரையின் இடைநடுவில், சில பந்திகள் தவறவிடப்பட்டுவிட்டன. ஆகையால், வாசகர்களின் நலன் கருதியும், கட்டுரையை முழுமையாக வேண்டும் என்பதற்காகவும் மீளப் பிரசுரிக்கின்றோம். ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம்.
(ஆர்)



இலங்கையில் எந்தப் பழைமையான அரசியல் கட்சிகளும் தளங்களுமே கனவிலும் எதிர்பார்க்காத அனுர என்ற பொதுமக்கள் துணைகொண்ட பெரும் புயல் திடீரென வீசி யாவரையும் கலங்கடித்துவிட்டது தப்பினோம் பிழைத்தோம் என்று தப்பியோடியவர்கள் ஒருசிலர் இருக்க, வேறுசிலர், தவிக்கும் நிலையில், எச்சங்களாக வெளிவந்து தங்கள் கைக்குக் கிட்டிய, தசைகள் எலும்புகள் போன்ற வெவ்வேறு பிரச்சினைகளைத் தோண்டிப் பூதாகாரமாக்கி வாக்காளர்களைக் குழப்பியடிக்க முயல்கின்றனர். கூறப்போனால் நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்தே பேரினவாத, மதவாத, இனவாத வெறிகொண்டவர்களே இதுவரை அரசியலில் கூட்டாக இயங்கியுள்ளனர். சிறுபான்மையினரைக் குறிபார்க்காத, கறைபடியாத, கரங்கள் எதுவும் பெரும்பான்மையினது அரசியலில் இருக்கவே இல்லை என்பதே உண்மை. எனினும் இன்றைய சாதாரண மக்கள் விழிப்படைத்துள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. போலி அரசியல்வாதிகளிலிருந்து ஏற்படக்கூடிய புதுவித மாற்றம், தங்கள் அடிப்படைத் தேவைகளையும் சமுதாய ஒருங்கிணைப்பையும் சரிசெய்யும் என்ற ஒரு பேரவா அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இது இன, மத, சாதிக்கு அப்பால், எல்லாக் குடியானவர்களுக்கும் மிகவும் பொருத்தமானதே.

எம் தமிழர் பிரச்சினை உட்பட வேறு சில தேவைகள் காலத்தால் கட்டாயம் தீர்க்கப் படவேண்டியவையே. குறிப்பாக, இனக் கலவரங்களால் எமக்கு ஏற்பட்ட இழப்புகளும் தொடர்ந்த காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக ஏங்கித் தவிக்கும் பெற்றோரும் உற்றோரும் அனுபவிக்கும் ஆறத் துயருக்கு ஏற்ற விடைகளும் மாற்றுவதற்கான மருந்தொன்றும் அவர்கள் ஆயுட் காலத்தில் கிடைக்குமா என்ற சந்தேகம் எப்போதுமே தொடர்கிறது. இன்றைய ஏழைமக்கள் பசி பட்டினையை நீக்கி, ஊரையே பசியாறிய கொள்ளையர்களையும், அவர்களோடு ஒட்டி உறவாடி உறிஞ்சி வாழ்ந்த அரசியல் பிரமுகர்களையும் துரத்தியடிப்பது காலத்தின் அவசியத் தேவையாகவே உள்ளது. இந்த மாற்றங்களை அடுத்து எம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் அணுகுமுறைகளுக்காகப் பொதுமக்களும் எம் அரசியல்வாதிகளும் தயாராகி, நல்லமுறையில் திட்டமிடப்பட்டு, அரசியல் முகங்கள் யாவரும் ஒரே நிலைப்பாட்டுடன் ஒருங்கிணைந்து கையாள்வதே வெற்றியளிக்கலாம். அதோடு எவருக்குமே இரண்டு பக்கங்கள் இருப்பது இயற்கை எமக்குத் தேவையானவற்றைச் சாதிக்கச் சாமர்த்தியமும் தேவை. சிங்கப்பூர் போன்ற ஒரு சிறந்த நாட்டை உருவாக்கக் கனவு காணும் எந்த இலங்கை ஆட்சியாளனும் அங்கு வாழும் சகல இனங்களின் வல்லமையையும் ஒற்றுமையையும் நாடிக் கைகோர்க்காமல் கடைசிவரை அடையமுடியாது.


அதற்கு மாறாகத் தொடர்ந்தும் அடக்குமுறை, அதிகார வெறியையும் இந்த துவேஷத்தையும் தொடர்ந்தும் கக்க முயன்றால் அதன் எதிர்விளைவுகள் மிகவும் பாரதூரமாக இருக்கும் என்ற செய்தி எந்த ஆட்சியாளருக்கும் புரியாமல் இருக்க முடியாது. குறிப்பாக, சர்வதேசங்களின் உற்றுநோக்கலும் எம் புலம்பெயர்ந்தோரின் அசுர வளர்ச்சியும் சந்தர்ப்பம் கிடைப்பின் தமிழ்ப் பிரதேசங்களை உச்சநிலைக்கு ஒரு நொடியிலேயே கொண்டு சென்றுவிடும் தன்மை காணப்படுகிறது.

எம் அரசியல்வாதிகளின் ‘பெரும்போக்கு’ தேர்தல் களத்தில் குதித்திருக்கும் தமிழரின் எதிர்காலத்தில் அக்கறைகொண்டு களத்தில் இறங்கியுள்ள வேட்பாளர்களிலிருந்து புரிந்து கொள்ளலாம். அவர்கள் ஆற்றுக்கு மேலிருந்து அறுந்து தொங்கும் ஆடுபாலத்தில் எட்டிப்பிடித்து ஊஞ்சலாடிக் கொண்டு ஒருவர் காலை ஒருவர் இழுத்து யாவரும் அமிழ்ந்து போகும் அபாயச் சங்கின் ஒலியே பரந்து கேட்கிறது அவர்கள் யாவருமே தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற தனித்துவப் பண்பு கொண்டவர்கள். அவர்களில் பலர், பிரச்சினைகளோடு சேர்ந்து தம் வாழ்க்கையை நடாத்த முயல்பவர்களே தவிரப் பொதுமக்களின் அன்றாட வாழ்வுப் பிரச்சினைகளையோ, இளையோர் வழிநடத்தல், பொருளாதார, மொழி சம்பந்தமான எதிலுமோ முழுமனதுடன் செயற்பட்டு அவற்றிற்குத் தீர்வு காணுவதில் அக்கறை கொண்டுள்ளார்கள் என்பது கேள்விக்குறியே எம் பாராளுமன்றப் பிரதிநிதிகள் சிலரை மிகவும் சுலபமாக வாங்கி விடலாம் என்பதையும் பெரும்பான்மை இன அரசுகள் காலம் காலமாகப் புரிந்து வைத்துள்ளன.

எம் தமிழ் உள்ளக அரசியலும் எம் அரசியல் முன்னேற்றத்துக்கு மிகுந்த தடையாக உள்ளது என்பதை நாம் உணரும் தருணம் இது. மறைமுகமாக இயங்கும் சாதி, மதம் போன்ற அடக்கு முறைப்போக்கும் இன்னும் எம் சமுதாயத்தில் புகுந்திருப்பதை யாராலும் மறுக்கமுடியுமா? எம் பிரதேசங்கள் சார்ந்த ஏற்றத் தாழ்வு உணர்வுகளிலிருந்து மீண்டு, வேறுபாடுகளிலிருந்து வெளிவந்து, நாம் யாவரும் சகோதரர்கள் என்று மானசீகமாகக் கட்டியணைப்பவர் எம்மில் ஒரு சிலரே. ஏன், எத்தனையோ இன்னல்களைச் சந்தித்துத் தப்பிவந்து வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்த எம்மில் பலர் குட்டையில் ஊறிய மட்டைகளாகவே போலி வேடங்கொண்டுள்ளோம்.

எமது தாயக இளைய சமுதாயத்துக்கு தம்மால் இயன்றதைச் செய்து உயர்த்தவேண்டிய நிலையிலுள்ள புலப்பெயர்ந்தோர் சிலரின் நடவடிக்கைகள் உகந்ததாக இல்லை என்றே கூற வேண்டும். நாம் நாள் நாளாகக் கல்வியின் முக்கியத்துவத்தையும் அதன் மூலம் பெறக்கூடிய பலாபலன்களையும் பெற்றோர், ஆசிரியர், குடும்பத்தவர் என்று பலராலும் கூறிக் கேட்டு வழிநடத்தப்பட்டு, அதில் எம்மில் பலர் வெற்றியும் கண்டுள்ளோம். குறிப்பாக வெளிநாடுகளில், எம் உள்நாட்டு ஏற்றத்தாழ்வுகளை உடைத்தெறிந்து எவரையும் சமநிலைக்கு உயர்த்தி வைத்து அழகு பார்க்கும் சிறப்பை, நாம் கல்வியால் அடையும் தராதரம் கொண்ட வெற்றியால் மட்டுமே சாதிக்கலாம். இன்றும் அந்த வகையில் எம் தாயக உறவுகளின் பிள்ளைகள் பலர் கல்வியில் முன்னிலை வகிப்பது பாராட்ட வேண்டியதொன்றாகும். எனினும், இன்று அங்குப் பொதுநல சேவைகள் யாவுமே சோரம் போய் விட்டதால் பலரின் வாழ்க்கையிலும் தேவைக்கேற்ப வெளியுறவுகளின் உதவி அவசியமே. எனினும், அங்குச் செல்லும் சில புலம்பெயர்ந்தோரின் அநாகரிக வீண் செலவுகளாலும் தேவையற்ற வழிக்காட்டல்களாலும் இளம் சமுதாயத்தினர் சிலர் அந்தப் போலி வாழ்க்கையையே பெரிதாக எண்ணி மயக்கமடைவதோடு, ஊரிலிருந்து தம் துன்பங்களையெல்லாம் புறந்தள்ளி மாடாக உழைத்துத் தம் குழந்தைகளை உயர்த்த முனையும் பெற்றோர்களைத் தோல்வியாளர்களாக அடையாளங்காண முற்படுகின்றனர். துர்ப்பழக்கங்களுக்கும் அடிமையாகின்றனர். அவர்களின் கல்விக்குத் துணைநின்று அவர்கள் ஒரு நல்ல சுய நிலையினை அடைவதற்கோ அன்றில் வெளிநாடு செல்வதற்கோ வழி வகுக்க இயன்றவரை உதவுவதே உகந்தது.

ஆகவே இன்றைய சூழ்நிலையில், சமுதாய மாற்றமொன்று எம் தமிழர் தாயகத்திலும் ஏற்படுவது அவசியமாகிறது. சீரான, கல்வி வளம் கொண்ட, இளம் சந்ததியினரை வளர்ப்பதோடு, எம் தமிழர் சமுதாயம் கௌரவமாகவும், ஏமாற்றப்படாமலும், எமக்கென்ற அடையாளத்தோடும், சமத்துவ உரிமைகளோடும் பாதுகாப்பாக வாழ வேண்டியதும் எம் எதிர்காலத் தேவைகளாகும். இந்த முழுப் பொறுப்பும் உள்நாட்டில் வாழும் எம் தமிழ் வாக்காளர்களின் கையிலும், அவர்கள் தீர்ப்பிலுமே தங்கியுள்ளது. முகம் பார்த்து மோசமடையாமலும், சமுதாயப் பாதிப்புகள் கொண்ட சொந்த விருப்பு வெறுப்புகளையும் நீக்கி, ஒன்று கூடிச் சிந்தித்து, உங்கள் வாக்குகளைச் சிதறடிக்காமல் ஒன்று திரட்டி, எமது பிரதிநிதித்துவங்களைத் தக்க வைக்கும் பாரிய கடன் உங்கள் கையில் உள்ளது. எமக்கு மிகவும் அவசியமான சமுதாய சீர்திருத்தங்களோடு இணைந்து உழைக்க எண்ணும் புதுமை விரும்பிகளையும் இளமைத்துடிப்புடன் மாற்றத்தை நோக்கிப் பயணிக்கும் நல்லவர்களையும் அடையாளம் கண்டு அவர்கள் கைகளில் அந்தப் பாரிய பொறுப்பை அளிப்பதே சிறந்ததாகத் தெரிகிறது.





# நாவாயூர் கடலின் தொன்மையும் தற்கால போக்கும்



எஸ்.கிறிஸ்டினா,
மூன்றாம் வருட மாணவி,
ஊடக கற்கை துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



யாழ். குடா நாட்டின் மேற்கு கடற்கரைப் பகுதியில் யாழ். பண்ணை கடற்கரைப் பரப்பிற்கும், அராலிகடற் பரப்பிற்கும் இடைப்பட்ட பகுதியில் வடகடற்பிரதேசம் நாவந்துறை கிராமம் என அழைக்கப்படுகின்றது.

இங்கு வாழுகின்ற பெரும்பாலான மக்களின் பிரதான ஜீவனோபாயமாக மீன்பிடித்தொழில் காணப்படுகின்றது.

குறிப்பாக சுமார் 300க்கும் அதிகமான கடற் தொழிலாளிகள் இன்று வரை கடலை நம்பியே தமது குடும்ப வாழ்வினை நகர்த்திச் செல்கின்றனர். எமக்குக் கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையில் சுமார் 100 வரையிலானோர் முதிர் வயது காரணமாக இத்தொழிலிலிருந்து ஓய்வு பெற்றவர்களாகவும் யாழ். மாவட்ட கடற்றொழில் சங்கங்களின் சமாசத்தின் ஓய்வூதிய பணம் பெறுபவர்களாகவும் அறுவது தொடக்கம் எழுபது வரையிலானோர் மீன்பிடிக்க இயந்திரப் படகைப் பயன்படுத்துகின்றனர். இன்றும் 100 பேர் வரையிலானோர் இயந்திரப் பாவனையின்றி சாதாரண மரத்திலான வள்ளம் என அழைக்கப்படுகின்ற ஒருவகை படகைப் பயன்படுத்துகின்றனர்.

ஏனைய சிலர் சொந்தத் தொழிலோ படகோ இன்றி ஏனையோருடன் இணைந்து கூலி அடிப்படையில் தொழில் புரிந்து வருகின்றனர். இவற்றைவிடக் கிட்டத்தட்ட அறுபது பேர் தற்போது பூநகரி கேரைதீவு, சங்குப்பிட்டி பாலத்தை அண்டிய கடற்பகுதிகளில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்கிராமம் முன்னைய காலங்களில் இக்கிராமத்தில் பெரும்பாலானோர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும், இன்றைய நவீன யுகத்தில் புத்திஜீவிகள், கல்வி அறிவு, தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாக இக்கிராமத்தைச் சேர்ந்த இளையோர் பலர் வங்கிகள், நிதி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், பல்கலைக்கழக கல்வி போன்ற காரணங்களினால் இத்தொழிலைக் கைவிட்டு வருகின்றமையை காணமுடிகின்றது.

இக்கடல் கிராமத்தைப் பொறுத்தவரையில் நீண்ட கடற்பரப்பையும், வளங்களையும் கண்டல், தாழை கன்னா போன்ற தாவரப் பெருக்கங்களும் அதிகளவாகக் காணப்பட்டதனால் இங்குள்ள கடற்கரையோரங்களில் மீன், இறால், நண்டுகளின் இனப்பெருக்கம் அதிகமாகவே காணப்பட்டது. இதனால் இத்தொழிலை நம்பி இருந்தோரும் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கப்பெற்று வாழ்வும் வளமும் நிறைந்த சுமுகமான ஓர் கிராமமாக யாழ் குடாநாட்டில் தழைத்தோங்கிக் காணப்பட்டது.

மீன்பிடித் தொழில் என்கின்ற போது, பெரும்பாலானோர் அறிந்திராத விடயம் யாதெனில், அத்தொழிலினுள் காணப்படுகின்ற தொழில் வகைகளே ஆகும். கரைவலை, தூண்டில் வலை, இழுவை வலை, இறால் வலை, சிறகு வலை, கண்டி வலை, விடு வலை, கூட்டுத் தொழில் பறிக் கூடு, மடி, வீச்சு வலை தங்கூசி வலை, நண்டு வலை என பலதரப்பட்ட தொழிலின் தன்மை அடிப்படையிலான, பாவிக்கின்ற வலையை அடிப்படையிலான, பாவிக்கின்ற படகினை அடிப்படையாகக் கொண்ட தொழில் வகைப்பாடுகள் காணப்படுகின்றன. இவற்றினுள் இக் கிராமத்தைச் சேர்ந்தோர் இறால் கூடு, தூண்டில், பறிக் கூடு, நண்டு வலை போன்ற தொழில் புரிவோரும் காணப்படுகின்றனர்.

இக்கிராமத்தினுடைய மீன்பிடித் தொழிலின் தற்காலப் போக்கினை நோக்குகின்ற போது இயந்திரமயமாக்கப்பட்ட தொழில் முறைமையின் கீழ் அதிகரித்துச் செல்லும் போக்கும் குடிசன அடர்த்தி காரணமாகக் கடற்கரையோர அத்துமீறிய குடியிருப்புகளின் காரணமாகவும் கடற்கரைக்கும் குடியிருப்புக்குமான இடைவெளி 50 மீற்றரை விட குறைந்த நிலையே காணப்படுகின்றது. இதன் காரணமாகக் கடற்கரை மணல் பரப்பு குறைவடைவதாலும் கடற்கரையோர தாவரங்கள் அழிந்து சென்றுள்ளதினாலும், குப்பை கூழங்களின் அதிகமான தேக்கநிலை காரணமாகவும் கடல் வாழ் சிறு உயிரினங்களின் பெருக்கத்திற்குப் பங்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் இங்குள்ள கடற்றொழிலாளிகள் தமது வருமானத்திற்குத் தேவையான உழைப்பை நாடி கேரைதீவு, பண்ணை கடப்பிரதேசங்களை அண்டியும் தொழில் புரிவதோடு மேலதிக வருமானத்திற்காக அயல் கிராமத்தவர்களோடு இணைந்து ஆழ்கடல் மீன்பிடி தொழில்களான ரோலர், மடித் தொழில், அகல வலை போன்ற தொழிலிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்.

அது மட்டுமன்றி, தற்காலத்தில் அதிகரித்து வரும் முதலீட்டுத் தொழிலான கடல் அட்டைப்பண்ணை வளர்ப்பு முறையிலும் தம்மை ஈடுபடுத்தி உள்ளனர். இதன் காரணமாக அவர்களுக்குக் கிடைக்கின்ற வருமானத்தை விடப் போக்குவரத்து டீசல் மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள் செலவும் தொழில் பராமரிப்பு செலவும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். குழுவாக இணைந்து முதலீடு செய்து தொழில் செய்கின்ற போதிலும், நிரந்தரமற்ற குறைந்தளவான வருமானமே கிடைக்கப் பெறுகின்றது. இவ்வருமானமானது அதிகரித்து வரும் விலைவாசி காலத்தில் அன்றாட தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளக் கூட போதுமானதாக இல்லை என்பது கண்கூடு. இதை விடக் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தொழில் தடைகளும் தொழில் உபகரண சேதங்களும் இவர்களைப் பெரிதும் பாதிப்பதுண்டு.

இவை எல்லாவற்றிக்கும் மேலாக நிலப் பிரதேசத்தில் இடம்பெறும் காணி ஆக்கிரமிப்பு போலவே கடற்பரப்பிலும் அட்டைப்பண்ணை என்கின்ற பெயரில் ஏக்கர் கணக்கில் அரச அனுமதி பெற்று அட்டைப் பண்ணைகள் உருவாகி வருவதனாலும் ஆழ்கடல் மீன்பிடி தொழிலான ரோலர், படுப்புவலை போன்ற தொழில்களின் அதிகரிப்பும் சட்டப்பூர்வமற்ற டிஸ்கோவலை, தங்கூசி வலை, டைனமைற் தொழில் டைனமிக் தொழில் போன்றவற்றினால் சிறு சிறுமீன் இனங்களின் பெருக்கம் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் சிறு மீன்பிடி தொழிலை நம்பி இருக்கின்ற இக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்போக்கு தொடர்ந்தும் காணப்படுமாயின் இக்கிராமத்தினுடைய ஜீவனோபாய தொழிலான உவர் நீர் மீன்பிடி தொழிலானது இல்லாமல் போகின்ற நிலை கூட ஏற்படலாம் இவை குடும்ப வறுமை, தொழிலிழப்பு, சட்டவிரோத குற்றச் செயல்கள், பசி, பட்டினி என்கின்ற நிலைக்குக் கூட மக்களைக் கொண்டு செல்லும் நிலை வரும் என எதிர்வு கூறப்படுகின்றது.

என்ன வளம் இல்லை இந்த கடல் பரப்பில் என வாழ்ந்த மக்கள் மனதிலே இங்கு என்ன இருக்கின்றது என்ற கேள்வி உருவாகத் தொடங்கியுள்ளது. இந்த நிலைமை மாறவும் வளம் காக்கப்படவும் உரிய அதிகாரிகளும், அலுவலர்களும், அரசியல்வாதிகளும், விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இங்குள்ள கடற்றொழில் புரிவோரின் வேண்டுகோளாகும்.

இந்த விடயங்கள் யாவும் அங்குத் தொழில் செய்கின்ற தொழிலாளர்களிடம் நேரடியாகச் சென்று கள ஆய்வு செய்யப்பட்டுத் தொகுக்கப்பட்ட விடயங்கள் ஆகும்.





# பயணத்தை நம்பிய வாழ்க்கை

ச.தனுஷ்கா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



**இலங்கையின் தளம்பலான பொருளாதார பின்னணியில் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு தினமும் போராடிக் கொண்டிருக்கும் சமூகத்தில் சாரதிகளும் உள்ளடங்குகின்றனர். அதிலும் முச்சக்கர வண்டி ஓட்டுநர்களாக முழுநேர தொழிலில் ஈடுபடுபவர்கள் இன்னும் தமது சவாரிகளை நம்பியே வாழ்கின்றனர். 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் முழு நேர முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் பெரும் சவால்களைச் சந்தித்தமை மறுக்க முடியாத உண்மையாகும். அதிக விலை கொடுத்து பெற்றோலுக்காக நாள் முழுவதும் வரிசையில் நின்றனர். அதிகரித்த விலைவாசியால் முச்சக்கர வண்டி சவாரிகளுக்கான கட்டணங்களும் அதிகரித்தன. இதனால் சவாரிகள் இன்றி முச்சக்கர வண்டி ஓட்டுநர்களது வருமானமும் குறைவடைந்தன. இத்தகைய பின்னணியிலேயே முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் தமது வருமானத்திற்கான போராட்டத்தைத் தினம் தினம் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.**

நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் இன்று பல செயலிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவை வெற்றிகரமாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வகையில் இன்று உள்ளூர் போக்குவரத்துத் துறையில் தடை இல்லாத சேவையைப் பெறுவதற்கும் வழங்குவதற்கும் பிக்மீ செயலி காணப்படுகிறது.

நாள்தோறும் சவாரிகளுக்காகக் காத்திருக்கும் முச்சக்கர வண்டி ஓட்டுநர்களுக்கு இச்செயலி இரட்டிப்பு வருமானத்தைத் தருவதாக உள்ளது. இச்செயலியை வரவேற்கும் ஒரு தரப்பினர் இருந்தாலும்கூட, விமர்சிக்கும் தரப்பினரும் இருக்கத்தான் செய்கின்றனர். இது தொடர்பாக களவாய்வில் ஈடுபட்ட போது, பல முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் பிக்மீ செயலியை தமது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் ஒரு உபாயமாகவே கருதுகின்றனர்.

சாரதியான சுந்தரலிங்கம் சிவகாந் கூறியதாவது, "பிக்மீ செயலியால் சாதாரண மக்களும் உழைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இன்று தொழில்நுட்பத்தின் ஊடாக இணைந்து செயல்படும் இச்செயலியின் ஊடாக இரட்டிப்பு பயனை நம்மால் பெறக்கூடியதாக உள்ளது. முன்னர் நாம் எதிர்கொண்ட சவால்கள் இதனால் குறைவடைந்துள்ளன. வாடிக்கையாளர்களுடன் வீண் சண்டை, பேரம் பேசுதல் என்பன முற்றிலுமாக இங்குத் தவிர்க்கப்படுகிறது. பயணத்திற்கு ஏற்ற கட்டணம் அறவிடப்படுவதால் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்படுகின்ற கட்டணமும் எமக்குக் குறைவாகக் காணப்படுவதில்லை. இங்கு ஏமாறுவதற்கும் ஏமாற்றப்படுவதற்குமான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு. இச்செயலியைப் பயன்படுத்தத் தொடங்கிய காலத்திலிருந்து அதிகமான வெளிநாட்டுச் சுற்றுலாப் பிரயாணிகள் வாடிக்கையாளர்களாகக் கிடைத்துள்ளனர்"

"ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தபோது வாடிக்கையாளர்களை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் தன்மை உண்டு. ஆனால், பிக்மீ செயலியைப் பயன்படுத்தத் தொடங்கிய காலத்திலிருந்து வாடிக்கையாளர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை. பயணத்திற்கு ஏற்ற கட்டணம் அறவிடப்படுவதால் இங்கு மோசடிகளுக்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளன. வாடிக்கையாளர்களுக்கான பாதுகாப்பும், நம்பிக்கையும் இருக்கும் பட்சத்தில் சவாரிகளுக்கான வாய்ப்புகள் சந்தர்ப்பங்கள் அதிகமாகவுள்ளது.

தொழிலுக்குச் சாதகமாக இச்செயலி இருந்தாலும் கூட, பாதகமான சூழ்நிலைகளும் காணப்படுகின்றன. தற்கால பொருளாதார சூழ்நிலையில், முச்சக்கர வண்டி வருமானமானது, இலங்கையின் விலைவாசியில் எமது அன்றாட வாழ்வினை கொண்டு நடத்துவது என்பது மிகவும் போராட்டமானதாகும். "எமக்கு சவாரி என்பது எப்பவும் ஒரே மாதிரியாக அமையாது. தளம்பலான வருமானம், தளம்பலான வாழ்க்கை ஓட்டத்தையே நாம் எதிர்கொள்கின்றோம்.

நவீன செயலியைப் பயன்படுத்தத் தெரியாத மக்கள் மற்றும் முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் அதிருப்தியைக் காண்பிக்கும் போக்குள்ளது. தொழில்நுட்பத்தை அணுக முடியாத மக்களால் தம்மை அடுத்த கட்ட அபிவிருத்திக்கு முன்னகர்த்திக் கொள்ள முடியாமல், சவால்களை எதிர்கொள்கின்றனர். இதனால் வீண் முரண்பாடுகள் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு இடையில் ஏற்படுவதுண்டு" என்கிறார்.

ஆட்டோ ஓட்டுநரான சுந்தரலிங்கம் சிவகாந்.

"கைத்தொலைபேசி இல்லாத வீடுகளே இன்று இல்லை. சிறு குழந்தை முதல் முதியவர்கள் வரை நவீன கையடக்க தொலைபேசியை இலகுவாகப் பயன்படுத்திக் கொள்ளப் பழக்கப்படுத்தியுள்ளனர். அதேபோல, நவீன கையடக்க தொலைபேசியுடன் இணைந்து வருகின்ற சேவைகளையும் அணுகக்கூடிய திறனை வளர்ப்பது சாதகமான அம்சங்களை வழங்கும். மக்கள் புதிய முயற்சிக்கு தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள முயற்சிப்பதனூடாக தொழில் ரீதியாக வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆறு மாத குறுகிய காலப்பகுதிக்குள் பெரும்பான்மையான முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் பிக்மீ செயலியைப் பயன்படுத்த உள்வாங்கியுள்ளனர். நவீன செயலிகளினூடாக சாதகமான அம்சங்கள் காணப்பட்டாலும் பாதகமான அம்சங்களும் இருக்கத்தான் செய்கிறன. வைத்தியசாலை, பேருந்து நிலையம், புகையிரத நிலையம் போன்ற ஒரு சில பொது இடங்களை அண்மித்த பிரதேசங்களில் பிக்மீயில் பதிவு செய்த முச்சக்கர வண்டிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், பிக்மீயில் பதிவு செய்யாத பிற முச்சக்கர வண்டி ஓட்டுநர்களின் வருமானத்தைப் பாதிக்காத வகையில் இவ்விதிமுறை பின்பற்றப்படுகிறது. எத்தகைய நவீன செயலிகளைத் தொழிலுக்காகப் பயன்படுத்தினாலும் கூட, முச்சக்கர வண்டி ஓட்டுநர்களின் வருமானமானது நிலையானதாக இல்லை.ஒரு நாளைக்கு ஆகக்கூடியது 1,500 ரூபாவாக உள்ளது.

இன்றைய நவீன காலகட்டத்தில் ஒவ்வொருவரும் தமது திறன்களை வளர்த்துக்கொள்ள முயல வேண்டும். காலம் போகும் போக்கில் அதன் வேகத்திற்கு ஈடு கொடுக்க வேண்டும். இவ்வாறு இருந்தால் மாத்திரமே போட்டி நிறைந்த உலகில் ஒவ்வொருத்தரும் தம்மைத் தக்க வைத்துக் கொள்ள முடியும். எம்மில் குறைகளை வைத்துக்கொண்டு தொழில்நுட்பத்தைக் குற்றம் சாட்டுவதில் பயனற்ற செயல். எமது வருமானத்தைத் தீர்மானிப்பதாக நாம் செல்லும் சவாரிகளே காணப்படுகின்றன.

CODE-சவாரி இல்லையென்றால் வருமானமும் இல்லை. ஆட்டோவில் ஓட்டம் இல்லை என்றால் வாழ்க்கையிலும் ஓட்டமில்லை" என்கின்றார். முச்சக்கர வண்டி ஓட்டுநர் சுந்தரலிங்கம் சிவகாந்.

தளம்பலான வருமானத்தைக் கொண்டு வாழ்க்கைச் செலவுகளை ஈடு செய்வதற்காகக் கடுமையாக உழைக்க வேண்டிய சூழ்நிலைக்கு இன்று ஒவ்வொரு முச்சக்கர வண்டி ஓட்டுநர்களும் தள்ளப்பட்டுள்ளனர். ஊழல் நிறைந்த ஆட்சியாளர்களால் சாதாரண கூலித் தொழிலாளர்களும் நாள் சம்பளத்திற்குப் பணி புரிகின்ற சாதாரண வாகன சாரதிகளும் அதிகம் சவால்களைச் சந்திக்கின்றனர். தற்போது 2024 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற அனுரகுமார திசாநாயக்க,நாட்டை சிறப்பாக வழி நடத்துவார் என்னும் நம்பிக்கை மக்களிடம் அதிகமாக உள்ளது.கடந்த ஆண்டுகளில் எதிர்கொண்ட சவால்கள் இனிவரும் நாட்களில் ஏற்படாதவாறு ஊழல் அற்ற ஜனநாயக ஆட்சியை மேற்கொள்வார் என நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

எதிர்பார்ப்புகள் நிறைவேறாத

# முதல் பயணம்








ச.அபிசரண்,
மூன்றாம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான ஹொக்கி போட்டியானது செப்டெம்பர் மாதம் 17,18, 19 ,20ஆம் திகதிகளில் ரஜரட்டைப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற இருந்தது. இதற்குரிய தயார்ப்படுத்தலோடு, 16ஆம் திகதி மதிய நேரம் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து எமது பயணத்தைத் தொடங்கினோம். யாழ்ப்பாண பல்கலைக்கழக பேருந்திலே ஆண்கள் அணியினர் பெண்கள் அணியினர் என இரு அணியினரும் ஏறிக்கொண்டோம். சரியாக மதியம் இரண்டு முப்பது மணிக்கு எங்களுடைய பயணம் ஆரம்பமானது. நான்கரை மணி நேரப் பயணத்திற்குப் பின்னர் ரஜரட்டை பல்கலைக்கழகத்தைச் சென்றடைந்தோம். அன்று இரவு நேரம் ஆகியதால் நாங்கள் ரஜரட்டை பல்கலைக்கழக விடுதிகளிலே தங்கிக் கொண்டோம் . அத்துடன், இரவு உணவையும் உண்டு விட்டு பயணக்களைப்போடு உறக்கத்திற்குப் போனோம். மறுநாள் காலை வேளை சுறுசுறுப்பாக எழுந்து இம்முறையாவது ஹொக்கி போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்கின்ற உயரிய எதிர்பார்ப்போடும் இலக்கோடும் நமது பயணம் மைதானம் நோக்கி நகர்ந்தது. இதற்கிடையில் இறுதி ஆட்டத்திற்கு எப்படியாவது உள் நுழைந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு எமது இரு அணியினரும் வலுவான பயிற்சி பெற்று ஆட்டத்தில் களமிறங்கினோம். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போட்டிகளில் செம்பியன் பெற்றும் கூட இம்முறை எம்மை எதிர்த்து களம் காண வந்த ஜெயபுர பல்கலைக்கழக அணியினர் மற்றும் பேராதனை பல்கலைக்கழக அணியினரோடு பலமான போட்டியிட்டோம். இரண்டு வலுவான அணிகள் வந்த போதிலும் நாங்கள் பலத்தோடு எதிர்கொண்டு இறுதி ஆட்டத்திற்குப் போக வேண்டும் என்று நினைத்திருந்தோம். முதலில் களம் கண்ட ஜெயவர்த்தனபுர அணியினர் ஒரு கோலைப் பதிவு செய்தார்கள். பின்னர் சளைக்காமல் நாங்களும் மோதி ஒரு கோலைப் பதிவு செய்து ஒன்றுக்கு ஒன்று என்ற கோல் கணக்கில் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது. இருந்தாலும் போட்டியின் நடுவர் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணிக்குச் சார்பாக நடந்து கொண்டதால் சில மனக்கசப்புகள் ஏற்பட்டிருந்தன. இதைப் பார்த்த ஏனைய அணிகளுக்கும் ஏனைய நடுவர்களுக்கும் தெள்ளத் தெளிவாக இது பிழையான விடயம் என்பது தெரிந்தது. இருந்தாலும் அந்த நேரத்தில் எவராலும் எதுவும் செய்து முடியாத இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு இருந்தோம்.

ஒரு கட்டத்துக்கு மேல் நடுவரின் தவறான தீர்ப்பினால் இன்னும் ஒரு கோலைப் பதிவு செய்த ஜெயவர்த்தனபுர அணியினர் வெற்றி பெற்றுக் கொண்டார்கள். நாம் தோல்வியைச் சந்தித்தோம். இதனால் இரண்டுக்கு ஒன்று என்ற கோல் கணக்கில் முதல் போட்டியில் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணியினரிடமிருந்து நாங்கள் தோல்வியைப் பெற்றுக் கொண்டோம் .அன்று இரவு நாங்கள் ஒன்று கூடி ஒரு தீர்மானத்தை எடுத்துக்கொண்டோம் மறுநாள் விளையாட்டின் போது பிழைகள் விடக்கூடாது எவ்வாறான பிழைகளைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்கின்றவாறு அதில் முடிவுகள் எடுக்கப்பட்டன. இருந்தாலும் மனதளவில் சோர்ந்து விடாமல் மறுநாள் பேராதனை பல்கலைக்கழக அணியினை எதிர்கொண்டு வெற்றி பெற வேண்டும் என்ற கனவோடு அயர்ந்து உறங்கினோம். பேராதனை பல்கலைக்கழக அணியோடு மோதிக்கொண்ட நாங்கள், முதலில் ஒன்றுக்குப் பூஜ்ஜியம் என்ற கோல்களில் முன்னிலை வகித்தோம். இரண்டு நடுவர்கள் பங்கு பற்றி இருந்த இந்த போட்டியில் ஒருவர் கோல் இல்லை எனவும் ஒருவர் கோல் எனவும் கூறிக்கொண்ட போது, இடையில் சில முறுகல்கள் ஏற்பட்டது. இந்த பிரச்சினை தொடர்பில் எங்களுடைய அணித் தலைவர் நடுவரோடு பேச்சு வார்த்தையில் ஈடுபட்டும், அது பலன் அளிக்கவில்லை. மறுநாள் போட்டியிலும் நடுவரின் தீர்ப்பு பிழையாகவே இருந்தது. ஆகவே, ஒன்றுக்கு ஒன்று என்ற கோல் கணக்கில் இரு அணிகளும் இருந்தோம். இறுதியாகத் தண்ட உதை மூலம் எங்களுடைய வீரர்கள் சிறப்பாக விளையாடி இருந்தாலும், இறுதியில் ஐந்துக்கு நான்கு என்கின்ற கோல் கணக்கில் தோல்வியுற்று குழு நிலையிலான போட்டியிலிருந்து நாங்கள் முற்று முழுதாக வெளியேறினோம். அதாவது கால் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறாமல் நாங்கள் வெளியேறி இருந்தோம். இது எங்கள் அனைவருக்குமே கவலை தரக்கூடிய சம்பவமாகவே இருந்தது. அதைவிட எங்களுடைய ஹொக்கி அணியிலிருந்து இவ்வருடம் ஏழு சிரேஷ்ட வீரர்கள் வெளியேறுகிறார்கள். அந்த விடயம் கூட எங்கள் அணியின் பலம் இழப்பிற்கு இன்னும் ஏதுவாக அமைந்திருந்தது. இதேவேளை, அடுத்த வருடம் நடைபெற இருக்கக்கூடிய கொக்கி விளையாட்டுக்களில் அவர்கள் பங்கெடுத்த முடியாத ஒரு சூழ்நிலையும் காணப்பட்டது. ஒட்டுமொத்தத்தில் பார்க்கின்ற பொழுது அது ஒரு பெரிய இழப்பாகவே, எங்களுடைய அணிக்கு அமைந்திருந்தது.

எது எவ்வாறாக இருந்த போதிலும், எங்களுடைய அணி பலம் வாய்ந்த அணி என்றும் இறுதி ஆட்டத்திற்குச் செல்லக்கூடிய தகுதி கொண்ட அணி என்றும் எல்லோராலும் பாராட்டப்பட்டது. அந்த ஒரு விடயமே அந்தக் கவலையான நேரத்தில் கூட எங்களுக்கு மன ஆறுதலைத் தந்தது.

இதேவேளை, எங்களுடைய கொக்கி பெண்கள் அணி முதலாவது ஆட்டத்தில் களனி பல்கலைக்கழக அணியைச் சந்தித்து மூன்றுக்கு ஒன்று என்கின்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது ஆட்ட நேர முடிவில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைச் சந்தித்து ஒன்றுக்கு ஒன்று என்கின்ற கோல் கணக்கில் சமநிலை பெற்று இறுதியில் தண்ட உதை மூலம் தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது.




# உழலுதல் ஒரு பேரின்பம்



சயனிகா ஸ்ரீ,
ஊடகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

இலங்கையைச் சுற்றி வருவதற்கு மிகவும் உகந்த மாதம் என்று நாம், எமது குடும்பம் தேர்ந்தெடுத்த மாதம் ஏப்ரல் மாதத்தின் தொடக்கம். இந்த பயணம் 2021 ஏப்ரல் நாம் மேற்கொண்ட பயணத்தில் ஞாபக குறிப்புகள் பயணம் புறப்பட வேண்டும் என்பதால், முதல் நாள் மனம் மகிழ்ச்சியில் நிறைந்து இருந்தது. பயணத்தின் தொடக்க நாளாக ஏப்ரல் முதலாம் திகதியைத் தேர்ந்தெடுத்தோம்.

அதிகாலை 5.00 மணிக்கு நாங்கள் அனைவரும் முதல் கட்டமாக எமது வசிப்பிடமாகிய திருகோணமலையை அங்கிருக்கும் ஆலயங்களைத் தரிசித்து பயணத்தை ஆரம்பிப்போம் என தீர்மானித்தோம். பனி விலகிய காலம் அது. ஆனால், ஒரு இளம் குளிர் படர்ந்து கொண்டே இருந்தது. இலங்கை ஒரு சிறிய தீவாக இருந்தாலும், அதனைச் சுற்றி வருவது சாதாரண விடயம் அல்ல, மனதில் ஒரு தன்னுணர்வு உண்டாக வேண்டும்.

திருகோணமலை நான் பிறந்து வளர்ந்த நகரம். மார்கழி தவிர்த்து எக்காலத்திலும் கடும்வெயில் வெளுத்து வாங்கும் பிரதேசமாகும்.

மேலும், மாணிக்கவாசகர் அது உயிருண்ணிப் பத்தில் சிவனைப் பாடும்போது ‘ஊனார் உடல் புகுத்தான், உயிர் கலந்தான்’, ‘உளம் பிரியான்’ என்று உருகுவார். இங்குள்ள திருக்கோணேச்சர நாதனைக் காணும் போதெல்லாம் எனக்குள் ஒரு மாணிக்கவாசகர் உருக்கொள்வர். இத்தலம் பாடல் பெற்ற தலம் என்று சிறப்புக் கூறியது. இத்தலம் அமைந்துள்ள இடத்தை நீங்கள் காணும் போதெல்லாம் உங்களுக்கு ஒரு பரவசம் பெறக்கூடும். “குருந்தொடு முல்லைக்கொடி விடும் பொழில் சூழ் கோணமாம் அமைந்தாரே...” என்று சம்பந்தர் பாடிய பதிகத்தை நினைத்து உருகி மலை சேரும் சிவனடியார்கள் எத்தனை பேர் என்று யார் யாரறிவார். சம்பந்தர் பாடும் போது, குறித்த பதிகங்களில் மலையமந்தாரே என்று பாடியுள்ளார். மலையில் அமர்வதும் அம்மலையிலிருந்து கடலை காண்பதும் எத்துணை பெரும் பேறானது.

நாம் திருகோணமலையில் இருந்து புறப்பட்டு இலங்கையின் மிக நீளமான கிண்ணியா பாலம் வழியாக மட்டக்களப்பு நோக்கிய பயணமானோம். கிண்ணியா பாலம் சுமார் 1,300 அடி நீளமானது. 2009இல் சிவில் யுத்தம் முடிந்த பின்பு, இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட மிகப்பெரிய உட்கட்டுமானம் இதுதான். உள்நாட்டுப் போரில் முதலில் அரச படைகளால் கிழக்கு மாகாணம் கைப்பற்றப்பட்டது. அதன் பின்பு இரண்டரை ஆண்டுகளை கழித்தே வடக்கும் கைப்பற்றப்பட்டது. திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் செல்வதற்கு மிகக் குறுகிய வழியாக இந்த பாலம் அமைந்தது.

கிண்ணியா, மூதூர், தோப்பூர், சேருநுவர, வெருகல் வழியாக கதிரவெளி சென்றடைந்தோம். எனக்கு இந்த வெளி என்று சொற்பதம் என்றால் என்ன என்று ஒரு குழப்பம் உண்டு. காற்றுவெளி இடை கண்ணம்மா என்பது போல. மட்டக்களப்பில் சந்தவெளி, நாவிதன்வெளி, உப்புவெளி என்று வெளி என்ற சொல்லைக்கு கொண்டு ஊரமைத்திருப்பார்கள். இது குறித்து வாகரைப் பகுதியில் உள்ள ஒருவரை மறிந்து கேட்டேன். “இங்கிருந்து பாருங்கோ... எந்த பெரிய வெளியா இருக்கு இந்த இடம் எல்லாம். இதுக்கு பின்ன எப்படிப் பெயர் வைப்பார்” என்று கூறி சென்றார். அவரது நக்கலின் உண்மையும் இருந்தது. மட்டக்களப்பில் வாகரை-வெருகல் அந்த இரண்டு இடப்பெயர்களையும் நான் எனது தந்தை சொல்லி பன்னிரெண்டாவது வயதிலிருந்து கேட்டும் வாசித்தும் வருகிறேன். அதுமட்டுமன்றி, சென்று கொண்டிருக்கும்போதே, அப்பா எங்களுக்கு சில விடயங்களைக் கூறினார்.

மலைத்துூர் ராமகிருஷ்ணன் எழுதிய மலையாள நாவல் ஒன்று, வெருகல் என்ற பெயரில் வருவதாகவும், இதில் தமிழ் ஐயர் ஒருவரின் கதை உள்ளதாகவும் கேள்விப்பட்டேன். அங்கு 2004 தொடக்கம் 2008 வரை இரத்த ஆறுகள் ஓடியதாகப் பல விவரங்கள் உள்ளன. ஈழத்து யுத்தம் அல்லது வடுக்கள் சார்ந்த நாவல்களிலோ சிறுகதைகளோ அல்லது புனைவுகளிலோ இந்த இரண்டு ஊர்ப் பெயரும் இடம்பெற்ற வில்லை என்றால், அது பூரணமான ஒன்றாக இருக்காது. நான் நினைக்கின்றேன், இந்த இரண்டு ஊர்கள் பற்றி கவிஞர் கருணாகரன் பல கவிதைகளில் எழுதியுள்ளார். அவரது இரத்தமாகிய இரவும் பகலுமுடைய நாட்கள் என்று தொகுப்பில் அதனை வாசித்த ஞாபகங்கள் உள்ளன. அதில் படுவான்கரை குறிப்புகள் என்ற நெடுங் கவிதை அற்புதமான ஒன்று. அதில் தான் “தேன்நாட்டின் மீன்கள் பாட மறுத்தன” என்று கருணாகரன் சகோதரச் சண்டையின் இரத்த சோகத்தை விவரணமாக்கி இருப்பார், என்றவாறு அப்பா எங்களுக்குக் கூறிக் கொண்டிருக்கும்போது, நாங்கள் மாங்கேணி - ஒட்டமாவடி வழியாக வந்தாறு முலை கிழக்கு பல்கலைக்கழக வாசலை வந்தடைந்து இருந்தோம்.

கிழக்குப் பல்கலைக்கழக முகப்பு மிகச் சிறந்த ஒரு தோரணையில் அமைக்கப்பட்டு இருந்தது. ஏ 15 பிரதான வீதி என்பதனால் சன புழக்கங்களும் மிகுந்திருந்தனர். வெயிலில் பயணம் செய்து வந்தது கூட்டத்தில் நிற்பதற்கு மிகுந்த அயர்ச்சியை அளிப்பது. எனினும், வந்தன் ஞாபகார்த்தமாக குடும்பமாகப் புகைப்படம் எடுக்க எண்ணி மாறி மாறி நின்று புகைப்படம் எடுத்தோம்.

புகைப்படம் எடுத்துவிட்டு மதிய உணவு என்பதற்காக மட்டக்களப்பு மாநகருக்குள் உட்பிரவேசித்தோம். மூன்று பக்கமும் நிலத்தால் சூழப்பட்ட கடற்கரைக்காயலை அப்போது கண்டடைந்தோம். நான்கரை 5 ஐந்து மணி இருக்கும். நாம் சென்றடைய வேண்டிய தூரம் இன்னமும் நூற்று இருபது கிலோ மீற்றர் இருந்தது. என்றாலும் மீன்பாடும் தேன்நாட்டில் நாம் நேரத்தை வீணடிக்கவே விரும்பினோம்.

மட்டக்களப்பில் இருந்து அருகம் குடாவுக்கு இரவு நேரத்தில் பிரயாணத்தை மேற்கொள்வது என்பது ஆபத்தானது. அம்மா இருள் சூழ சூழ புலம்பு ஆரம்பித்தார். அவதானமாகச் செல்ல வேண்டும் என்று அதற்கு இரண்டு காரணங்கள் ஒன்று இடையில் காணப்பட்ட வாகன நெருக்கடிகளும் எதிர்வரும் வாகனங்களின் வெளிச்சம், இரண்டாவது வீதிகளில் காணப்படும் யானை பிரச்சனை. என்றாலும் நானும் எனது அண்ணனும் அருகம் குடாவுக்குச் சென்றே ஆக வேண்டும் என்று இருந்தோம்.

அதற்குக் காரணம் விடிகாலையில் சூரிய உதயத்தை அந்த இடத்தில் காணும் போது புதிய உணர்வும் உத்வேகமும் உண்டாகும் என்பதே ஆகும். மட்டக்களப்பிலிருந்து அருகம் குடா செல்வதற்கு 120 கிலோ மீற்றர் என்ற போதும் எமக்கு 3.30 மூன்றரை மணி நேரங்கள் பிடித்தது இருந்தது. அம்மாவின் புலம்பலும் அக்காவின் குழந்தைகளினதும் எங்களதும் பாதுகாப்புக்காக மெதுவாகவே எமது பயணம் இருந்தது. இரவின் நிழல் எமது பயணத்தில் பட்டுத்தெறித்தது. இரவு 11 பதினோரு மணிக்கு அருகம் குடாவைச் சென்றடைந்தோம். அருகம் குடா இலங்கையில் மிகப் பிரபலமான சுற்றுலாத் தலம். இங்குக் கடல் நீரில் நீருலாவல் curfing மேற்கொள்ளக்கூடிய உலகின் சிறந்த 10 இடங்களில் இதுவும் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் தான் 2019இல் so srilanka pro 2019 சோ ஸ்ரீலங்கா ப்ரோ என்று உலகளாவிய நீர்ச்சறுக்கல் போட்டி நிகழ்த்தப்பட்டது.


நாம் எந்த இடம் சென்றடைகிறோமோ அந்த இடத்திலிருந்து இணையத்தில் தங்கும் அறைகளை புக் செய்து தங்குவது என்றே முடிவு செய்யப்பட்டது. அப்படி தங்குமிடம் கிடைக்கவில்லை என்றால், வானிலையே தங்குவோம் என நினைத்து வைத்து இருந்தோம். இது இரண்டுமே அரைவாசி அரைவாசியாக நடந்தது. ஒரே ஒரு தங்குமிட வசதி அறை தான் கிடைத்தது. ஆகவே, அக்காவையும் இரண்டு பிள்ளைகளையும், துணைக்கு அம்மாவை அங்கே தங்க வைத்துவிட்டு நானும் ஏனையவர்களும் வானிலேயே சிரித்துக் கதைத்து எப்போது தூங்கினோம் என தெரியாமல் தூங்கினோம்.

எத்தனை மணிக்குத் தூங்கினாலும் காலையில் 4.00 நான்கு மணிக்கு எழும்பும் வழக்கத்தை அப்பா கொண்டிருந்தார். அந்த வழக்கத்திற்கு ஏற்ப அப்பா விழித்துக் கொண்டார். எங்களையும் எழுப்பி விட்டார்.

ஒரு மணி நேரம் கடல் அலைகளைப் பார்த்துவிட்டு அனைவரும் கடலின் அருகே சென்றோம். பேரலைகள் மிகத் தள்ளியே வீசின. 2004 சுனாமியின் போது, இந்த இடங்கள் சிதைவடைந்திருந்தன. அதனை அப்போது நினைத்துக் கொண்டேன். ஏராளம் புகைப்படங்கள் எடுத்தோம்.

இயற்கையின் அழகையும் அதன் பேரழிவையும் நினைவு கூர்ந்து விட்டு அங்கிருந்து வீடு திரும்ப மனம் இல்லாமல் நானும் என் குடும்பத்தாரும் அருகம் குடாவிலிருந்து மீண்டும் வீடு நோக்கிப் புறப்பட்டோம்.

எழுதப்பட்ட தரவரிசைகளின் வழியாக மட்டுமல்ல, இலக்கியங்களின் வழியாக மட்டுமல்ல பயணத்தின் மூலமும் நாம் பல விடயங்களை அறிந்து கொள்ளலாம் என இந்த பயணக் கட்டுரை எழுதியதன் பின்னரே நான் புரிந்து கொண்டேன்.





பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

# மூன்றாமிடத்துக்கு முன்னேறிய தீக்‌ஷன

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் மூன்றாமிடத்துக்கு இலங்கையின் மகேஷ் தீக்‌ஷன முன்னேறியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்றாவது போட்டியில் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதைத் தொடர்ந்தே ஐந்தாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை இப்போட்டியில் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இலங்கையின் வனிது ஹசரங்க ஏழாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு, 1.அடில் ரஷீட், 2.குடகேஷ் மோட்டி, 3.மகேஷ் தீக்‌ஷன, 4.அகீல் ஹொஸைன், 5.ரஷீட் கான், 6.வனிது ஹசரங்க, 7.அடம் ஸாம்பா, 8.பஸல்ஹக் பரூக்கி, ரவி பிஷ்னோய், 10.அன்றிச் நொர்கியா.

இந்நிலையில், மேற்குறித்த போட்டியில் 39 ஓட்டங்களைப் பெற்ற இலங்கையின் பதும் நிஸங்க, துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் 12ஆம் இடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு, 1.ட்ரெவிஸ் ஹெட், 2.சூரியகுமார் யாதவ், 3.பில் ஸோல்ட், 4.பாபர் அஸாம், 5.மொஹமட் றிஸ்வான், 6.யஷஸ்வி ஜைஸ்வால், 7.ஜொஸ் பட்லர், 8.பதும் நிஸங்க, 9.பிரெண்டன் கிங், 10.ஜொஷ் இங்லிஸ்.

இன்று ஆரம்பிக்கிறது இரண்டாவது டெஸ்ட்:



## தொடரைக் கைப்பற்றுமா நியூசிலாந்து?

இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது பூனேயில் இன்று வியாழக்கிழமை (24) காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலாவது போட்டியை நியூசிலாந்து வென்ற நிலையில் தொடரைத் தக்க வைக்கப்பதற்கு இப்போட்டியில் இந்தியா தோல்வியுற முடியாமல் இருக்க வேண்டியுள்ளது.

இந்திய அணியில் ஷுப்மன் கில் உடற்றகுதியைப் பெற்றுள்ள நிலையில், கடந்த போட்டியில் ஸஃப்ராஸ் கான் சதம் பெற்ற நிலையில், லோகேஷ் ராகுல் பெரிய இனிங்ஸொன்றை ஆட வேண்டிய அழுத்தத்தில் காணப்படுகின்றார். ஆகாஷ் டீப் வெளியில் இருக்கும் நிலையில் மொஹமட் சிராஜ்ஜும் பிரகாசிக்க வேண்டிய கட்டாயத்தில் காணப்படுகின்றார்.

புனே ஆடுகளமானது மெதுவான சுழற்சியை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் நியூசிலாந்தில் டிம் செளதியை இஷ் சோதி பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.



இலங்கைக்கான சுற்றுப்பயணத்தில்

## மிற்செல், வில்லியம்சன் உள்ளிட்டோருக்கு ஓய்வு

இலங்கைக்கெதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான தொடர்களில் டொம் பிளென்டல், டெவோன் கொன்வே, டொம் லேதம், டரைல் மிற்செல், வில்லியம் ஓ ரூர்க், றஷின் றவீந்திர, டிம் செளதி, கேன் வில்லியம்சன் ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இத்தொடருக்கான அணித்தலைவராக மிற்செல் சான்ட்னெர் பெயரிடப்பட்டுள்ளார்.

குழாம்: மிற்செல் சான்ட்னெர் (அணித்தலைவர்), மிஷெல் பிறேஸ்வெல், மார்க் சப்மன், ஜொஷ் கிளார்க்சன், ஜேக்கப் டஃபி, லொக்கி பெர்கியூசன், ஸக் பௌக்ஸ், டீன் பொக்குறொஃப்ட், மிற்ச் ஹே (விக்கெட் காப்பாளர்), ஹென்றி நிக்கொல்ஸ், கிளென் பிலிப்ஸ், டிம் றொபின்சன், நாதன் ஸ்மித், இஷ் சோதி, வில் யங்.

சம்பியன்ஸ் லீக்:

## டொட்டமுண்டை வீழ்த்திய மட்ரிட்

### ஜுவென்டஸ் தோற்றது



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் புதன்கிழமை (23) நடைபெற்ற ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்டுடனான போட்டியில் 5-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் வென்றது.

ஸ்பானிய லா லிகா கழகமான மட்ரிட் சார்பில் வின்ஷியஸ் ஜூனியர் மூன்று கோல்களைப் பெற்றதோடு, அந்தோனியோ ருடிகர், லூகாஸ் வஸ்கூஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். டொட்டமுண்ட் சார்பாக டொன்யெல் மலென், ஜேமி பினோ ஜிட்டென்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற இன்னொரு புண்டெலிஸ்கா கழகமான வி.எஃப்.பி ஸ்டட்கார்ட்டுடனான போட்டியில் அவ்வணியின் எல் பிலால் தோரே பெற்ற கோலால் 0-1 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸ் தோற்றது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற நெதர்லாந்துக் கழகமான பி.எஸ்.வி ஐந்தோவனுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் சமப்படுத்தியது. பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாகப் பெறப்பட்ட கோலை அஷ்ரஃப் ஹகிமி பெற்றதோடு, ஐந்தோவன் சார்பாகப் பெறப்பட்ட கோலை நோவா லங் பெற்றிருந்தார்.

எல்லை விவகாரம்

## இந்தியா - சீனா ஒப்பந்தம்

கிழக்கு லடாக்கில் மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கு, இந்தியாவும் சீனாவும் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. இதை இரு நாடுகளும் உறுதிபடுத்தியுள்ளன.

லடாக்கில் உள்ள கல்வான் பள்ளத்தாக்கில் 2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்தியா மற்றும் சீனாவின் இராணுவ வீரர்களுக்கிடையே கடும் மோதல் ஏற்பட்டது. அதனை தொடர்ந்து, கிழக்கு லடாக்கின் உண்மையான கட்டுப்பாட்டுக் கோடு பகுதிகளில் இரு நாட்டு இராணுவங்களும் படை வீரர்களை குவிக்கத் தொடங்கின.

இதனால் சுமார் நான்கு ஆண்டுகளாக கிழக்கு லடாக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. இந்த சூழலில், கிழக்கு லடாக்கில் பதற்றத்தை தணிக்கும் வகையில் சீனாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது. இந்த ஒப்பந்தத்தை தற்போது சீனாவும் உறுதி செய்துள்ளது.

இதன்படி, எல்லை விவகாரங்கள் குறித்து சமீப காலமாக சீனா மற்றும் இந்தியா இடையே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில், தற்போது இரு தரப்பினருக்கும் இடையே ஒரு தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

மணிப்பூர்



## மணிப்பூரில் கிளர்ச்சியாளர்கள் கைது

மணிப்பூர் - கிழக்கு இம்பாலில் தடைசெய்யப்பட்ட காங்லீபாக் கம்யூனிஸ்ட் அமைப்பின் (மக்கள் போர்க்குழு) 6 கிளர்ச்சியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மணிப்பூர் பொலிஸார் புதன்கிழமை (23) தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து துப்பாக்கிகள், பிஸ்டல், 3 வெடிகுண்டுகள், 4 சக்கர வாகனம், 2 மோட்டார் சைக்கிள், 6 அலைபேசிகள் என்பன மீட்கப்பட்டன.

## சட்டத்தை இயற்ற மாநில அரசுக்கே அதிகாரம்



இந்தியாவில், தொழில்துறையில் பயன்படுத்தப்படும் மதுபானங்களை ஒழுங்குபடுத்தவும் வரி விதிக்கவும் மாநில அரசுகளுக்கே அதிகாரம் உள்ளது என, 9 பேர் அடங்கிய நீதிபதிகள் குழாம், புதன்கிழமை (23), ஒருமித்த கருத்துடன் தீர்ப்பளித்துள்ளது.

தொழில்துறை மதுபான உற்பத்தியில் மத்திய அரசுக்கு ஒழுங்குமுறை அதிகாரம் இருப்பதாக, 1997ஆம் ஆண்டு 7 நீதிபதிகள் கொண்ட உச்சநீதிமன்றம் அமர்வு தீர்ப்பளித்தது. இதையடுத்து, இந்த தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யப்பட்டது.

தொழிலக பயன்பாட்டு மதுபானம் தொடர்பாக, உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில், அனைத்து தரப்பு விசாரணைகளும் முடிவடைந்தன.

இந்நிலையில், தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் ரிஷிகேஷ் ராய், அபய் எஸ், பிவி நாகரத்னா, பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா, உஜ்ஜல் புயான், சதீஷ் சந்திர சர்மா, அகஸ்டின் ஜோர்ஜ் மாசி ஆகிய 9 பேர் அடங்கிய நீதிபதி குழாம், நேற்று புதன்கிழமை (23), மேற்கண்டவாறு தீர்ப்பளித்தது.

ஹிஸ்புல்லாவின்

இஸ்ரேல்

## புதிய தலைவரும் உயிரிழப்பு?



ஹிஸ்புல்லா இயக்கத்தின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஹஷேம் சபிதீனும் கொல்லப்பட்டுள்ளதாக, இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல்-காசாவின் ஹமாஸ் அமைப்பு இடையேயான போரில் லெபனானில் செயற்படும் ஹிஸ்புல்லா இயக்கம் ஹமாஸுக்கு ஆதரவாக உள்ளது. அந்த இயக்கம் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இதையடுத்து, லெபனான் மீதும் இஸ்ரேல் தீவிரமாக தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் ஹிஸ்புல்லா இயக்கத்தின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா மேலும் அந்த இயக்கத்தின் முக்கிய தளபதிகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

நஸ்ரல்லா கொல்லப்பட்டதையடுத்து, ஹிஸ்புல்லா இயக்கத்தின் புதிய தலைவராக அவரது உறவினர் ஹஷேம் சபிதீன் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கிடையே, சபிதீனும் கொல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 8ஆம் திகதி, இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, ஹிஸ்புல்லாவின் அடுத்த கட்ட தலைவர்களும் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், ஹஷேம் சபிதீன் பெயரை குறிப்பிடவில்லை. தற்போது ஹஷேம் சபிதீன் கொல்லப்பட்டதை இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

இருப்பினும்,இந்த செய்தியை ஹிஸ்புல்லா இயக்கம் இன்னும் உறுதி செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சொத்துகளை ஒப்படைக்குமாறு

அமெரிக்கா

## முன்னாள் மேயருக்கு உத்தரவு

நியூயோர்க் நகரத்தின் முன்னாள் மேயர் ரூடி கியுலியானி, அவர் அவதூறு செய்த தேர்தல் ஊழியர்களிடம் அவரது அடுக்குமாடி குடியிருப்பு, நகைகள் மற்றும் பிற மதிப்புமிக்க உடைமைகளை ஒப்படைக்குமாறு, அமெரிக்க நீதிபதி, செவ்வாய்க்கிழமை(22) உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, தேர்தல் ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய மில்லியன் கணக்கான நட்டஈடு தொகையான 148 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான உடைமைகளை, அடுத்த ஏழு நாள்களில் ஒப்படைக்க வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.




பல ஆண்டுகளாக டொனால்ட் டிரம்பின் தனிப்பட்ட வழக்கறிஞராக பணியாற்றிய கியுலியானி, 2020 ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதியின் தோல்விக்கு பிறகு வாக்காளர் மோசடி குறித்த ஆதாரமற்ற வதந்திகளைப் பரப்ப உதவினார் என்ற குற்றச்சாட்டின் கீழ், அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதில், விளையாட்டு நினைவுச் சின்னங்கள் மற்றும் பிற மதிப்புமிக்க உடைமைகளை ஒப்படைக்க வேண்டும், அதில் அவரது நியூயோர்க் நகர அடுக்குமாடி குடியிருப்பு, இரண்டு டஜன் ஆடம்பர கடிகாரங்கள் ஆகியவற்றை ஒப்படைக்குமாறு, நீதிபதி தீர்ப்பளித்தார்.

பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட வேண்டிய சொத்துகளின் பட்டியலில், யாங்கி ஸ்டேடியம் படம், ஒரு சட்டை மற்றும் படம். ஒரு வைர மோதிரம், ஆடை நகைகள் மற்றும் 26 கைக்கடிகாரங்கள், ஒரு ரோலக்ஸ், ஐந்து ஷினோலாக்கள், இரண்டு புலோவாக்கள் மற்றும் ஒரு டிஃப்பனி & கோ என்பன உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 24 ஒக்டோபர் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.